
நற்றுணையாவது நமசிவாயமே

# சைவ நீதி



SAIVA NEETHI

## 2013
## உங்கள் ராசிக்கு என்ன பலன்



பழனி அபிஷேக திருநீறு இணைக்கப்பட்டுள்ளது

Price £1

Brittania Hindu (Shiva) Temple Trust

Established 1974
Registered Charity No 269067

# உயர்வாசற்குன்று முருகன் கோயில்

# HIGHGATEHILL MURUGAN TEMPLE

## 200A Archway Road, London N6 5BA

அருவமும் உருவமுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

**பூசை நேரங்கள்**

**(Pooja Commences At)**

8:00am, 11:30am
5:00pm & 8:00pm

**On Tuesdays & Fridays**

Abisheham is at
6:45 pm &
Pooja is at 8:00am

**கொடியேற்றம்: 18/06/12**
**தேர்: 01/07/12**



**கோவில் திறந்திருக்கும் நேரங்கள்**

**(Temple Opens)**

திங்கட்கிழமை - வியாழக்கிழமை
***(Monday - Thursday)***
8:00am - 2:00pm
5:00pm - 9:00pm

வெள்ளிக்கிழமை (***Fridays***)
8:00am - 3:00pm
5:00pm - 10:00pm

வார இறுதி (***Weekends***)
8:00am - 3:00pm
5:00pm - 9:00pm

**The Highgatehill Murugan Temple, also known as Archway Murugan Temple is the oldest established Saiva (Hindu) Temple in London serving the hindus in general and the Tamil Saiva Community in particular from 1974.**

**Apart from the Temple on the top floor, the temple complex comprises of two halls, the larger one for wedding and religious functions and the middle one used by devotees and also for weddings.**

**The temple complex can be reached from either the Highgate tube or Archway tube station and by 134, 263 & 43 buses from these stations.**

Member of
The Federation of
Saiva(Hindu) Temples UK.

**For all bookings and information please contact administrator on**

**Tel: 020 8348 9835**

**Fax: 020 8482 6508**

***Email:*** *admin@highgatehillmurugan.org* ***Web:*** *www.highgatehillmurugan.org*

***Bankers:*** *National Bank Plc, Barclays Bank Plc* . ***Solicitor:*** *M/S Wimal & Co.*

மேன்மைகொள்

# சைவ நீதி

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2044

நந்தன - தை-மாசி

மலர் : 1 இதழ் : 1

சனவரி - 2013



பொறுப்பாசிரியர்

பத்மினி சிவானந்தசோதி

பதிப்பாசிரியர்

நா. சிவானந்தசோதி

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :

திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668

வங்கி இலக்கம் : 77 91 29

வங்கி : Lloyds TSB

வடிவமைப்பு : தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com


## சைவ மக்களுக்கு அரிய வாய்ப்பு

சைவத்தின் அடையாளம் திருநீறு, ஒருவன் காலைகடன் முடித்தவுடன் திருநீறு அணிந்து திருநீற்று பொலிவுடன் காட்சியளிக்கவேண்டும். அதனால் தான் ஒரு பாடலில் நீறு இல்லா நெற்றி பாழ், நெய் இல்லா உண்டி பாழ் என்று கூறியுள்ளார்கள்...

சம்பந்தரின் தேவாரம் கீழே சைவ மக்களுக்காக கொடுத்துள்ளோம்...

திருநீறு அணிந்து... தேவார பாடலை ஓதி இறையருள் பெறுக!

மாந்திரம் ஆவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தரம் ஆவது நீறு; துதிக்கப்படுவது நீறு;
தந்திரம் ஆவது நீறு; சமயத்தில் உள்ளது நீறு;
செந்துவர் வாய் உமை பங்கன், திரு ஆலவாயான் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு; வெந்துயர் தீர்ப்பது நீறு;
போதம் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு;
ஓதத் தகுவது நீறு; உண்மையில் உள்ளது நீறு;
சீதப் புனல் வயல் சூழ்ந்து திரு ஆலவாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு; முனிவர் அணிவது நீறு;
சத்தியம் ஆவது நீறு; தக்கோர் புகழ்வது நீறு;
பத்தி தருவது நீறு; பரவ இனியது நீறு;
சித்தி தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.







வாசக உள்ளங்களுக்கு!

சைவ சமயம் தொன்மைவாய்ந்த வாழ்நெறி சமயமாகும். சைவ மக்களுக்கென்று ஓர் ஆன்மிக இதழை தொடங்கவேண்டுமென்பது எனது நீண்ட கால கனவாகும். அக்கனவு "சைவநீதி" இதழின் மூலம் நிறைவேறியதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

புலம்பெயந்த சைவர்களுக்கு நல்ல வழிகாட்டுதலாகவும், சைவநெறியை மற்றமக்களுக்கு அறிமுகப்படுத்துவதாகவும் சைவநீதி இதழ் வெளிவரும் என்பதை உறுதியாக நம்பலாம்.

சைவநீதி வாசகர்களும் இதழின் செழுமைக்கு துணைநிற்கவேண்டும் என விரும்புகிறேன். வாசகர்கள் சைவம் சார்ந்த செய்தி, கட்டுரை, கருத்துகளை இதழுக்கு அனுப்பலாம். சிறப்பான படைப்புகள் இதழில் இடம்பெறும்.

சைவநீதி இதழின் தூய்மையான இறைத்தொண்டுக்கு புலம்பெயர்ந்த சைவர்கள் முழுமையான ஒத்துழைப்பு அளிப்பார்கள் என நம்புகிறேன்.

ஆலோசனைகளையும், ஆதரவையும் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பாக்கிறோம்.



**கணக்கு எண் 29513668**

**வங்கி இலக்கம் 77 91 29**

**வங்கி Lloyds TSB**



சுகி. சிவம், B.A., B.L.,

அலுவலகம்: 24995358
24984177

புலம் பெயர்ந்த தமிழர்கள் நலம் கருதி பத்தாண்டுகள் தமிழர் தகவல் நடத்தி சாதனை புரிந்த திரு,சிவானந்தஜோதி புதிய பணியில் இறையருளால் ஈடுபடுகிறார்.

தமிழர்தம் பண்பாட்டு அடையாளமான சைவநெறியை உணர்த்தவும், மறந்துபோன தமது தாய்ச் சமயத்தின் பண்டைய வாழ்வியல் வழிகளை மலர்த்தவும் அவரது '**சைவ நீதி**' பயன்படும் என நம்புகிறேன்.

தமிழ் மறைகளாகிய பன்னிரு திருமுறைகளையும் சிவ நெறிச் செல்வர்களின் சிந்தைக் கினிய செய்திகளையும் மரபு வழுவாமல் விளக்க இவ்விதழ் பாடுபடும் என உணருகிறேன்.

ஆகம நெறிகளையும், தமிழின் ஏற்றத்தையும் ஒரு சேர பாதுகாத்து, தமிழர் மனத்தளவில் ஏற்பட்டுள்ள சமயக் குழப்பத்தையும் தெளிவித்து, தமிழும் சைவமும் தழைக்க சைவ நெறி தொண்டாற்ற இறையருளை நினைத்து வாழ்த்துகிறேன்.

அன்புடன்

ஜனனி அடுக்ககம், 313/9, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை – 600 018.

எஸ்.எஸ். பவுண்டேஷன், 20/21, வீரபாண்டிய கட்டபொம்மன் தெரு, பெருங்குடி, சென்னை – 600 096. போன்: 24961110

முனைவர். ஜோதிடர்

## K.P. வித்யாதரன்


உலகெங்கும் தமிழ் மணம் பரப்பிக்
கொண்டிருக்கும் சைவ சிந்தனை திருமிகு. நா. சிவானந்த
ஜோதி தந்திடும் "சைவ நீதி" எனும் இதழை
மாதந்தோறும் வெளியிடும் வண்ணம் தயாரித்துக்
கொண்டிருப்பதை நினைத்து யாம் பெரிதும் மகிழ்கிறோம்.
"சைவ நீதி" தமிழ் கூறும் நல்லுலகம் யாவிலும்
செழித்தோங்க வாழ்த்துகிறோம்.

01/02/13



*Visiting Professor & Reserch Guide of Karpayam University, Coimbatore.*
**ஜோதிட ஆலோசகர்**
இவள் விகடன் ● சக்தி விகடன் ● தினகரன் ● குங்குமம்
தீபம் TV - தமிழர் தகவல் - London ● தமிழ் முரசு ● வெப் துனியா.Com
*E-mail : kpvl@kpvl.org. vidhyadharan.kp@gmail.com Web : www.kpvl.org*
நெ. 37, புதிய எண். 4, மகாலஷ்மி தெரு, தி.நகர், சென்னை-600 017.
போன் : 2434 8877 / 2433 5254 செல் : 9941708905 / 9444117115

# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்



இந்து சமயம் பொதுவாக இந்தியா முழுவதும் இருந்தாலும், அதன் ஒரு அங்கம்தான் சைவ சமயம். இந்து சமயத்தில் பல்வேறு சமயப் பிரிவுகள் இருந்தாலும், சைவம்தான் பழமையான சமய சித்தாந்தமாகும். பொதுவாகச் சித்தாந்தம் என்று சொன்னால், மிகவும் சிக்கலானது, எளிதில் புரிந்து கொள்ள முடியாதது என்றுதான் அனைவரும் கருதுகின்றனர். முடிந்த முடிவு என்பதுதான் சைவ சித்தாந்தம். ஒரு மனிதன் காலை எழுந்து, தன் காலைக் கடன்களை எல்லாம் முடித்து, குளித்துவிட்டு வந்து, நெற்றியில் நீறு எடுத்து அணிந்துகொண்டால், அதுதான் சைவ சித்தாந்தம் என்பார் அறிஞர் அ.ச.ஞானசம்பந்தம்.

எம்மைப் பொறுத்தவரை, சமயம் என்றால் சைவம் மட்டும்தான் எமக்குரியது. மற்றவையெல்லாம் பிற்பாடு ஏற்பட்டவை. அகராதிகளில் பார்த்தால், கோவில் என்ற பதத்திற்கு எதிரே சிதம்பரம் என்றுதான் இருக்கும். சைவர்களுக்கு மட்டுமல்ல, பொதுவாகவே கோவில் என்றால் சிதம்பரம்தான்.

இத்தனை கீர்த்தி வாய்ந்த சைவ சமயத்திற்குச் சைவந்தக்காரர்களாகிய நம் மக்கள், வழிபாட்டு முறைகளை, சரியான நீதியைப் பின்பற்றாமல், அவரவர்க்குத் தோன்றியபடியெல்லாம் அமைத்துக் கொள்கின்றனர். அப்படி இல்லாமல், சைவ

நீதியில் இருந்து வழுவாமல், நமது மரபுப்படி சமய வழிபாட்டினைப் பின்பற்றுவதற்கு ஒரு வழிகாட்டியாகத்தான் சைவநீதி இதழைத் தொடங்கியிருக்கிறோம்.

மாதம் ஒரு சைவ தரிசனம் என்ற வகையில், சைவத் திருத்தலங்களைப் பற்றி எழுத விருக்கிறோம். முதல் இதழ் தைப்பூசத்தையொட்டி வருவதால், அதற்குரிய சிறப்புக் கோயிலான பழனியைப் பற்றி இந்த இதழில் பார்ப்போம்.

வயதான பிறகுதான் கோயில் குளங்களுக்குப் போக வேண்டும் என்று பெரும்பாலும் நினைக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, உடலில் சக்தியும், தெம்பும் இருக்கும்போது, ஆண்டனை தரிசிப்பதுதான் நீதியாகும். என்னுடைய கோயில் தரிசனப் பயணத்தை இளவயதிலேயே நான் தொடங்கிவிட்டேன்.

1967இல் அரசாங்க உத்தியோகத்தில் 190 ரூபாய் சம்பளத்தில் இருந்தபோது, தமிழ்நாட்டுக் கோயில்களைச் சென்று பார்க்கவேண்டும் என்ற விருப்பம் தோன்றியது. முதலில் மதுரையில் இறங்கி மீனாட்சி அம்மனைப் பார்த்துவிட்டு, திருப்பரங்குன்றம் போனேன். பிறகு அங்கிருந்து பழனிக்குப் போனேன்.

இங்கே இன்னொரு விசயத்தையும் பகிர்ந்து கொள்ள எண்ணுகின்றேன். ஆண்டவனிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று வேண்டுகோள்களை வைப்பதற்காக மட்டுமே பலரும் கோவிலுக்குப் போகின்றனர். அப்படிப் போவது, ஏதோ வியாபார நிமித்தமான சந்திப்பு போல மட்டுமே இருக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. தொடக்கத்தில் நானும் கேட்டேன். என் அப்பன் சிவனும், முருகனும் நான் கேட்டவைகளைவிடக் கூடுதலாகவே எனக்கு அருளிச் செய்தனர். அதன்பிறகு நன்றி சொல்வதற்காக மட்டுமே கோவில்களுக்குப் போய் வருகிறேன்.

45 ஆண்டுகளுக்கு முன்பு நான் முதன் முதலில் தரிசித்த பழனிக்கும், இப்போதுள்ள பழனிக்கும் சிறிது வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை கட்டுமானங்களிலும், நவீன வசதி வாய்ப்புகளிலும் மட்டும்தான் தென்படுகின்றனவே அன்றி, பழனி ஆண்டவர் கோவிலும் வழிபாடுகளும் பக்திப் பரவசத்தோடு அப்படியேதான் இருக்கின்றன.

அன்று, யாராக இருந்தாலும், எவ்வளவு பெரிய கோடீஸ்வரராக இருந்தாலும், 329 படிகள் ஏறிச்சென்றால்தான் பழனியாண்டியைப் பார்க்க முடியும். ஒவ்வொரு படிக்கட்டிலும் அந்தப் பக்கம் ஒருவர் இந்தப் பக்கம் ஒருவர் என இரண்டிரண்டு பிச்சைக்காரர்கள் அமர்ந்திருப்பர். 10 ரூபாயை சில்லறையாக மாற்றி வைத்துக்கொண்டு இரண்டு பக்கமும் மாறி மாறிப் போட்டுக்கொண்டே சென்றால், களைப்பே தெரியாமல் மலை உச்சிக்குப் போய்ச் சேர்ந்திருப்போம். புண்ணியத்திற்குப் புண்ணியமும் சேரும்.

இன்று அடிவாரம் கார்களில் வந்து அப்படியே வின்ஞ்சிலும், ரோப் காரிலும் ஏறிப் போய் ஏறு மயிலோன் எதிரில் இறங்கிவிட முடிகிறது. நல்லது, இது விஞ் ஞானத்தின் வளர்ச்சி.

முன்பு புலம் பெயர்ந்த மக்கள், தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு வருவதற்கு பெரிதும் தயங்குவார்கள். காரணம், பணம் பிடுங்கும் நோக்கத்துடன் அங்கிருக்கின்ற சிலர், கண்டிப்பாக இந்த அபிசேகம் செய்யவேண்டும், இந்தப் பரிகார பூசை செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். இந்தத் தொல்லைகளுக்குப் பயந்துகொண்டே புலம்பெயர் மக்கள் வருவதில்லை. ஆனால் இப்போது அப்படியெல்லாம் எதுவும் நடப்பதில்லை. எல்லாமே முறைப்படித்தான் நடக்கின்றன.

நாம் விரும்பினால் 1500 ரூபாய் கட்டணம் கட்டி, அன்றைக்கு நம்முடைய முறையாக முருகப்பெருமானுக்கு அபிசேகம் செய்யும் வசதி இன்றைக்கும் இருக்கின்றது. அதேபோல் தரிசனமும் ஒழுங்கு மாறாமல் நடந்தேறுகிறது. தர்ம தரிசனம் இன்றும் கண்டிப்பாக உண்டு. மற்றபடி ரூ.20, ரூ.200

கட்டண தரிசனங்களும், வி.ஐ.பி. தரிசனம் என்பவைகளும் இருக்கின்றன.

நாள்தோறும் அதிகாலை 5.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம் அனைவரும் இலவசமாகக் கண்டு பரவசமடையலாம். அதோடு, ஒரு உலர் திராட்சை, சாப்பிடக்கூடிய சந்தனம் சிறிது, முருகனின் கச்சையில் இருந்து பிழிந்து எடுத்த அபிசேக தீர்த்தம் போன்றவை அடங்கிய பிரசாதம் வழங்கப்படுவது இக்கோயிலின் சிறப்பு.

தமிழ்நாட்டுக் கோயில்களில் பழனி முருகன் கோயிலில்தான் தங்கத் தேர் இழுக்கும் முறை முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது. விசேச நாட்களில் எப்போதாவது ஒருமுறை இழுக்கப்படும் தங்கத் தேர், இன்று ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்களால், ஒவ்வொரு நாளும் இழுக்கப்பட்டு நேர்த்திக்கடன் செலுத்தப்படுகிறது. தமிழ்நாட்டிலேயே அதிக வருமானம் தரும் கோயிலாகப் பழனி முருகன் கோயில் உள்ளது.



சிலர் போகின்ற வழியில் தென்படுகின்றன கோயில்களை எல்லாம் பார்த்துக் கன்னத்தில் போட்டுக்கொள்வதும், பூட்டிய கோயிலில்கூட சாமி கும்பிடுவதுமாக இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் ஆண்டவனை வழிபடுவதற்கென்று சிறப்பான நேரம், நாள் ஆகியவை இருக்கின்றன. பிரம்மோற்சவ நாளில் வழிபாட்டிற்குரிய நாழிகைக்குள் வழிபட வெண்டும். அதேபோல், ஒவ்வொரு கோயிலுக்கும் சிறப்பு நாள்கள் உண்டு. அந்த நாள்களில் அங்கு சென்று வழிபடுவதுதான் சிறப்பு.

உதாரணத்திற்கு, பழனிக்குப் பூசத்தன்று செல்வதுதான் புண்ணியம் தரும். திருச்செந்தூருக்கு சஷ்டிக்குப் போய்வந்தால்தான் புண்ணியம்.

இந்த ஆண்டு தைப்பூசத்தன்று, பழனிக்குச் சென்று என் அப்பன் முருகனைப் பார்த்துவிட்டு வந்துதான் இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். அடேங்கப்பா! எத்தனை விதமான கந்தன் காவடிகள், எத்தனை லட்சம் மக்கள்! காணக் கண்கோடி வேண்டும். அருணகிரி நாதரால் பாடல்பெற்ற தலமல்லவா! சிறப்புக்குப் பஞ்சமா என்ன? அத்தனை சிறப்புகளையும் கண்களால் அள்ளிப் பருக புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

சைவ மக்களாகிய நாம், சைவ நீதியை விட்டு விலகாமல், சைவப் புனித தலங்களுக்குப் போய் வருவது மிகச் சிறப்பு என்பது என் வேண்டுகோள்.

# லண்டனில் உள்ள சைவக்கோயில்கள்

**Crawley Sri Swarma Kamadchy Amman**
Unit 18 stephenson way, Three Bridges Crawley
West Sussex RH 10 1 TN ...............01293619918

**Coventry Shree Maha Sithi Vinayagar**
65a George Elliot Road
Coventry CV1 4HT ..........024 76632211

**Eela Patheeswarar Temple**
Pavitt Hall. Union Road, off Ealing Road Alperton
Wembley Middlesex HA0 4AU ........020 89023238

**Eella Kanthan Temple**
2 Lythalls Lane
Coventry CV6 6FG .......... 024 7666 3554

**Enfield Nagapoosani Amman Temple**
61-65 Church Lane Edmonton
London N9 9PZ.............020 8884 3333

**Highgatehill Murugan Temple**
200A archway Road Highgate
London N6 5BA ............ 020 8348 9835

**London Nadarajar Temple**
3C Ranelagh Road Wembley
Middlesex HAO 4TW .......... 020 8795 4258

**London Sivan Kovil**
4A Clerendon Rise Lewisham
London SE13 5ES ........... 020 8318 9844

**London Sri Meenakshi sunthareswarari Temple**
66A London Road
Tooting SW17 9HP .......... 020 3556 0901

**London Sri Murugan Temple**
78 Church Road, Manor Park East Ham
London E12 6AF......... 020 84788433


**London Sri Vinayagar Temple**
299-303 Ley street Ilford
Essex IG1 4BN .............. 020 89118934

**Lakshmi Narayan Temple**
541A Warwick Road
Tyseley Birmingham B11 2Jp ..... 0121 707 3154

**Liverpool Ganesh Temple**
Delfby Crescent Kirkby
Liverpool L32 8TN ......... 0151 546 7611

**Mankalapathy Sri Vel Murugan Temple**
Lochaber Hall, Lochaber Road Lewisham
London SE 13 .......... 020 86909310

**Milton Keynes Sundareswara Temple**
32 Exbury Lane westcroft, Milton Keynes,
Bucks MK4 4FE .......... 01908 508934



New Malden Murugan Temple
255 Burlington Road New Malden
Surrey KT3 4NE ........... 020 8942 4475

North England Sri Murugan Temple
36 Alexandra Road Leeds L6 1RF .... 01274 677912

Shree Ghanapathy Temple
125-133 Effra Road wimbledon
london SW19 8PU....... 020 8542 7482

Shree Sakthy Ghanapathy Temple
21 Brigstock Road Thornton Health, Croydon
Surrey CR7 7JJ.......... 020 8689 3466

Shri Kanagathurkkai Amman (Hindu) Temple Trust
5 Chapel Road West Ealing
London W13 9AE .......... 020 8810 0835

Shri Thurkai Amman Temple
73 Braybrooke road
Leicester LE4 9BQ ........ 0116 2769464

Sivaskanthagiri Arulmigu Murugan Temple
13-15 Thornton Road, Thornton Health Croydon
Surrey CR7 6BD........ 020 8684 0747

Sivayogam Muthumariamman Thirukovil & Thirumana Mandapam

Sri Katpaga Vinayagar Temple
2-4 Bedford Road Walthamstow
London E17 4PX ......... 020 85273819

Sri Mahalakshmi Temple
107-115 Healthfield Road Handsworth
Birmingham B19 1HL ......... 0121 554 4120

Sri Merupuram Maha Pathiragali amman Devasthanam
271 Forest Road Walthmstow
London E17 6HD ....... 020 8531 0872

Sri Raja Rajeswari Amman Temple
4 Dell Lane Stoneleigh
Surrey KT17 2NE ........... 020 83938147

Uchi Murugan Kovil
Rutland Avenue
High Wycombe HP12 3LL .......... 07841 522514

## சைவத் துளிகள்...

லண்டன் லூசியம் பகுதியில் உள்ள அருள்மிகு சிவன் கோவிலில் தொடர்ந்து பெரியபுராண சொற்பொழிவு நடந்தேறியது. இதன் நிறைவு விழாவாக 17.02.2013 ஞாயிற்றுக்கிழமை திருமுறை விழா நடைபெறவுள்ளது. பெரியபுராண சொற்பொழிவு நிகழ்வில் கலந்துக்கொண்ட பேச்சாளர்களுக்கு மரியாதை செய்யப்படும்.

அன்மையில் டூட்டிங்கில் இருந்து குறைடனுக்கு இடமாறிய அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் நிரந்தரமான கட்டடத்திற்கு இடம் மாறவுள்ளது. இக்கோவிலில் சிவமெருமான் மூலஸ்தான தெய்வமாக இடம்பெறுவார் என்ற செய்தி கசிந்துள்ளது.

லண்டனில் எத்தனை கோவில்கள் இருந்தாலும் சைவத்திற்கு ஏற்றவிதமாக எதுவும் அமையப்பெறவில்லை. எல்லா கோவில்களிலும் சைவ நெறிக்கு மாறான சில பிழைகள் நடைபெறுகின்றன. வரும் இதழ்களில் அவ்வாறன பிழைகளை சுட்டிக்காட்ட உள்ளோம். வாசகர்களும் இவ்விடங்களைப்பற்றிய கருத்துகளை தெரிவிக்கலாம்.

சைவ சமய வழிபாட்டில் சிறுதெய்வங்களுக்கு இடமில்லை. ஆனாலும் நவகிரகங்களுக்கு தனிக்கோவில்கள் இருப்பதாக குறிப்பிடுகிறார்கள். ஆனால் இந்தக்கொவில்களில் மூலத்தெய்வம் சிவன் என்பது குறிப்பிடத்தக்கது.

செவ்வாய் கிழமை, தேய்பிறையில் கீழ்நோக்கு கொண்ட ஆயில்யம் நட்சத்திரம், கடக ராசி, சதுர்த்தி திதி, விஷ்கம்பம் நாமயோகம், பவம் நாமகரணம், நேத்திரம், ஜீவனம் கூடிய சித்தயோக நன்னாளில் சூரிய உதயத்தை அடிப்படையாக கொண்ட நேரம் நள்ளிரவு மணி 12.34க்கு 1.1.2013-ம் ஆண்டு பிறக்கிறது. எண் ஜோதிடப்படி கற்பனை, காவிய கிரகமான சுக்ரனின் ஆதிக்கத்தில் (2+0+1+3=6) இந்தாண்டு பிறப்பதால் மக்களிடையே வீடு, மனை, வாகனம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் வரும்.

எதிலும் பெண்களின் ஆதிக்கம் பெருகும். சுரங்கங்கள், காற்றாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள் பாதிப்படையும். மின்சார தட்டுபாடு மே மாதம் வரை தொடரும். காலம் தவறி மழைப் பொழியும். புயல், வெள்ளப் பெருக்கால் விளை நிலங்களும் சேதமடையும். மக்களிடையே ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமென்ற எண்ணம் அதிகரிக்கும். போட்டி, பொறாமை குணங்கள் மேலோங்கும். பாலியல் சம்பந்தமான புதிய நோய்கள் உண்டாகும். இதய, புற்று நோய் தொடர்பான அறுவை சிகிச்சைகளுக்கான நவீன கருவிகள் கண்டறியப்படும். தங்கம் விலையில் ஏற்ற-இறக்கம் இருக்கும். சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலை உயரும். அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் கண்டறியப்படும். மனவளம் குன்றிய, மாறுபட்ட முக அமைப்பு மற்றும் தோல் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பிறப்பு அதிகரிக்கும். பால்



பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கும். விலையும் உயரும். வங்கிகளில் வாராக் கடனை வசூலிக்க கடுமையான சட்டங்கள் வரும். சில வங்கிகள் தனது கிளைகளை குறைத்துக் கொள்ள வேண்டி வரும்.

இந்தியாவின் ராசிக்கு சுகஸ்தானத்தில் இந்த ஆண்டு முழுக்க சனியும், ராகுவும் தொடர்வதால் அரசு நிறுவனங்களின் பங்குகள் தனியாருக்கு தாரை வார்க்கப்படும். அன்னிய நாட்டு நிறுவனங்களின் படையெடுப்பால் இந்திய பொருளாதாரம் வீழ்ச்சியடையும். இந்திய வர்த்தகர்களும் பெரிதும் பாதிப்படைவார்கள். மீண்டும் ஒரு சுதந்திரத்திற்காக போராட வேண்டிய நிலை உருவாகும். அரசியல்வாதிகளின் சுயநலம் அதிகரிக்கும். உழைப்பாளி கிரகம் சனியுடன், ஏமாற்று கிரகம் ராகு சேர்ந்து காணப்படுவதால் நடுத்தர, முதிய வயது ஊழியர்கள் வேலையையி ழப்பார்கள். இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் பெருகும். ஒருபக்கம் வேலை வாய்ப்பு பெருகினாலும் மற்றொரு பக்கம் கட்டாய ஓய்வால் பலர் வேலையையிழப்பர்.


எண் ஜோதிடப்படி இந்த ஆண்டின் (1+1+2+0+1+3) விதி எண்ணாக ஊழ்வினை கிரகமான சனிபகவானின் ஆதிக்க எண்ணான 8 வருவதால் உலகெங்கும் உயிர் சேதங்கள் அதிகரிக்கும். சக்தி வாய்ந்த மருந்துகளையும் சமாளித்து நோய்களை பரப்பக்கூடிய வலிமையான பாக்டீரியா, வைரஸ் கிருமிகள் உருவாகும். உணவுக் கலப்படம் அதிகரிக்கும். நோயில்லாத ஆரோக்யமான மனிதர்களை காண்பது அரிதாகும். அதேப் போல் வாய் சுத்தம், கை சுத்தமானவர்களையும் சந்திப்பது கடினமாகும். டாக்டர்கள், வக்கீல்கள் அதிகம் சம்பாதிப்பார்கள். கம்பியூட்டர், லேப்-டாப் உள்ளிட்ட எலக்ரானிக்ஸ் சாதனங்களின் விலை விழும். மனயிறுக்கத்தால் மக்கள் நிம்மதி இழப்பார்கள். அன்றாட பயன்பாட்டு அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துக் கொண்டே போகும். சுக்ரன் வீட்டில் சனி நிற்பதால் சினிமாத்துறையில் சின்ன பட்ஜெட் படங்கள் அதிகமாக வெளியாகும். பழைய படங்கள் மீண்டும் ஹிட்டாகும். அறிமுகக் கலைஞர்கள் அதிகம் சம்பாதிப்பார்கள். மணல், கம்பி, சிமெண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிக்கும். வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து மணல் இறக்குமதியாகும். தீவிரவாதிகள் நவீன தாக்குதல் நடத்துவார்கள். ஓட்டுநர்களை நெறிப்படுத்த புது விதிகள் பிறப்பிக்கப்படும். 4, 6, 8-ம் எண்கள் வலிமையடையும்.

பூமிக்காரகன் செவ்வாயின் வீடான மேஷத்தில் கேது நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் இயற்கை சீற்றத்தால் பூமி அளவு குறையும். நிலத்தடி நீரில் உவர்ப்புத் தன்மை அதிகரிக்கும். பூமியில் அதிசயப் பள்ளங்கள் உருவாகும். எரி நட்சத்திரங்கள் விழும். செவ்வாய், சந்திரன், சனி, சுக்ரன் ஆகிய கோள்கள் காந்தப் புயல், புழுதி புயலால் பாதிக்கும். பெண்கள் பூப்பெய்துவதில் மற்றும் மாதவிலக்கு குறைப்பாடுகள் அதிகரிக்கும். செயற்கை கருத்தரிப்பை அதிகமானவர்கள் நாடுவார்கள். ரியல் எஸ்டேட் பாதிப்படையும். அமைச்சர்களைக்காட்டிலும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளின் கை ஓங்கும். ராணுவ ரகசியங்கள் கசியும். பொறுப்புமிக்க பதவி வகிப்பவர்கள் சுய நலம், இன நலம் பார்த்து ஒருபட்சமாக செயல்படுவார்கள். நீதித் துறையிலும் சலசலப்புகள் வரும்.

பரிகாரம்

**நீதி கிரகம் சனியின் ஆதிக்கத்தில் இந்தாண்டு பிறப்பதால் முடிந்த வரை சொல்லிலும், செயலிலும் நேர்மையைப் பின்பற்றுவோம். நெல் விதைத்தால் கரும்பு முளைக்காது என்பதை உணர்ந்து பிறக்கு நல்லது செய்து நாமும் நன்மைப் பெறுவோம்.**

## மேஷம்



எதிலும் முதலிடத்தை பிடிக்க வேண்டுமென்று நினைப்பவர்களே! உங்கள் ராசிக்கு 4-ம் வீடான சுக வீட்டில் இந்த புத்தாண்டு பிறப்பதால் இழுபறியாக இருந்த வேலைகள் விரைந்து முடியும். மனக்குழப்பம் நீங்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். கல்யாணம், சீமந்தம், காதுகுத்தி என வீடு களைகட்டும். கனிவான பேச்சாலேயே காரியங்களை சாதிப்பீர்கள். பழைய சொந்தம் பந்தங்கள் தேடி வருவார்கள். சுக்ரன் சாதகமாக இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஷேர் மூலம் பணம் வரும். தங்க ஆபரணம்,விலையுயர்ந்த ஆடை வாங்குவீர்கள். இழுபறியாக வீடு கட்டும் பணியை தொடங்க வங்கி லோன் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். மனைவிவழியில் உதவிகள் கிடைக்கும். மகனுக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். வருடம் ஆரம்பிக்கும் போது உங்கள் ராசிநாதன் செவ்வாய் 10-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் புது பொறுப்பும், பதவியும் தேடி வரும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளின் நட்புறவு கிட்டும். ஒரு சொத்தை விற்று பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். புதிதாக வீடு, வாகனம் வாங்குவீர்கள். சகோதர சகோதரிகள் ஒத்தாசையாக இருப்பார்கள். தாய்வழியில் மதிப்பு, மரியாதைக் கூடும். உங்களை அழுத்திக் கொண்டிருந்த தாழ்வுமனப்பான்மை விலகும்.

1.1.2013 முதல் 2.2.2013 வரை கார்த்திகை நட்சத்திரத்தில் கேது செல்வதால் இக்காலக்கட்டத்தில் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. 3.2.2013 முதல் 11.10.2013 வரை பரணி நட்சத்திரத்தில் கேது செல்வதால் பரணி நட்சத்திரக்காரர்கள் இக்காலக்கட்டத்தில் மனஉளைச்சல், ஆரோக்ய குறைவுகளை சந்திக்க வேண்டி வரும். 12.10.2013 முதல் டிசம்பர் முடிய கேதுபகவான் அசுவனி நட்சத்திரத்தில் செல்வதால் அசுவனி நட்சத்திரக்காரர்கள் இக்காலக்கட்டத்தில் விபத்துகள், ஏமாற்றங்களை சந்திக்க வேண்டி வரும். 10.4.2013 முதல் 26.5.2013 வரை உள்ள காலக்கட்டத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் பாவ கிரகங்களின் பார்வை சேர்க்கையால் பலவீனமடைவதால் வீடு, மனை வாங்குவது, மற்றும் பண விஷயத்தில் உஷாராக இருக்க வேண்டும்.

வருடம் முடியும் வரை ராகு பகவான் உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் தொடர்வதால் சாதிக்க வேண்டுமென்ற வைராக்கியம் வரும் ஆனால் எதையும் முழுமையாக முடிக்க முடியாமல் அவதிபடுவீர்கள். குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை சச்சரவுகள் வந்துபோகும். மனைவி, பிள்ளைகளை அரவணைத்துப் போங்கள். மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, கர்ப்பப்பையில் கட்டி வரக்கூடும். சிலர் உங்களை புகழ்வதைப் போல் பேசி உங்களின் திறமையை பயன்படுத்தி முன்னேறுவார்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து, சிக்கனமாக இருக்கப்பாருங்கள். வெகுநாட்களாக செல்ல வேண்டுமென நினைத்த புண்ணிய ஸ்தலத்திற்கு சென்று வருவீர்கள்.

மே 28-ந் தேதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 2-ம் வீட்டில் தொடர்வதால் எதிர்பாராத வகையில் பணவரவும், உதவிகளும் கிடைக்கும். ஆனால் செலவுகள் அடுத்தடுத்து இருக்கும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். கல்யாணமாகி சில வருடங்களாகியும் வாரிசு இல்லையே என வருந்திய தம்பதியர்களுக்கு குழந்தைபாக்யம் உண்டாகும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையை உணர்வார்கள். மகனின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மூத்த சகோதரிக்கு இருந்த பிரச்சனைகள் நீங்கும். எதிரும், புதிருமாக பேசிக் கொண்டிருந்த உறவினர்கள் தன் தவறை உணர்வார்கள். சாமர்த்தியமாகப் பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். அதிக வட்டிக் கடனை பைசல் செய்வீர்கள். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டில் அமர்வதால் சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். மன தைரியம் கூடும். எதிர்ப்புகள் அடங்கும். என்றாலும் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாத அளவிற்கு வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும்.

வருடம் முழுக்க ராசிக்கு 7-ம் வீட்டில் சனி நிற்பதால் இனி எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். குடும்ப அந்தரங்க விஷயங்களில் மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். புதிய நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். யாருக்கும் ஜாமீன், கேரண்டர் கையெழுத்திட வேண்டாம். வெளிவட்டாரத்தில் உஷாராக பழகுங்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சனைகள் நீதிமன்றம் செல்ல நேரிடும். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்து போவது நல்லது. மனைவி வழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். அலர்ஜி, தோலில் நமைச்சல், செரிமானக் கோளாறு, நெஞ்சு எரிச்சல் வந்து போகும்.


வியாபாரிகளே! பெரிதாக முதலீடுகள் செய்து மாட்டிக் கொள்ளாதீர்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த புதிய சலுகைகளை அறிவிப்பீர்கள். நல்ல வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். நன்கு அறிமுகமானவர்களானாலும் கடன் தரவேண்டாம். கமிசன், ஷேர் மூலம் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களிடம் அவ்வப்போது மனஸ்தாபங்கள் வந்தாலும் லாபம் உண்டு. ஹோட்டல், கட்டிட பொருட்கள், இரும்பு வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்யோகஸ்தர்களே! கால நேரம் பார்க்காமல் உழைத்தும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லையே என வருந்துவீர்கள். சக ஊழியர்களுடன் மனத்தாங்கல் வரும். மேலதிகாரியுடன் அவ்வப்போது மனஸ்தாபங்கள் இருந்தாலும் அனுசரித்துப் போங்கள். திடீர் இடமாற்றம் உண்டு. மாணவர்களே! ஏனோ தானோ என்று படிக்காமல் முழு கவனத்தையும் செலுத்துங்கள். நல்ல நட்புச் சூழலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அரசியல்வாதிகளே! கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும். கலைஞர்களே! புதிய நிறுவனங்கள் வாய்ப்பளிக்கும். உங்கள் வெற்றி தொடரும். முன்கோபத்தை தவிர்த்து, ஆரோக்யத்தில் அக்கறைக் காட்ட வேண்டிய வருடமிது.

### பரிகாரம்

உளுந்தூர்பேட்டைக்கு அருகில் பரிக்கல் எனும் ஊரில் அருள்பாலிக்கும் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை வணங்குங்கள். மாற்றுத் திறனாளிக்கு உதவுங்கள். வெற்றி கிட்டும்.

# ரிஷபம்



நாட்டு நடப்பை நன்கு அறிந்தவர்களே! உங்கள் ராசிக்கு 3-வது வீட்டில் இந்த புத்தாண்டு பிறப்பதால் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வர வேண்டிய பணமெல்லாம் கைக்கு வரும். வருங்காலத்திற்காக சேமிக்கத் தொடங்குவீர்கள். புதியவர்கள் அறிமுகவார்கள். வெகுநாட்களாக வழக்குகள் இழுபறியாகிக் கொண்டிருந்ததே! இனி சாதகமாக முடியும். இந்த புத்தாண்டு பிறக்கும் போது சந்திரன் வலுவாக இருப்பதால் தொட்ட காரியம் துலங்கும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். மகளின் கல்யாணத்திற்காக வரன் தேடி அலைந்தீர்களே! எதிர்பார்த்த விதத்தில் நல்ல மணமகன் அமைவார். கல்யாணத்தை வி.ஐ.பிகள் முன்னிலையில் நடத்துவீர்கள். பாதிபணம் தந்து முடிக்காமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமாக நடந்து கொள்வார்கள். தந்தையார் சில நேரங்களில் கோபப்படுவார்.

இந்த வருடம் முழுக்க சனிபகவான் உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டிலேயே பலம் பெற்று நீடிப்பதால் முடங்கியிருந்த நீங்கள், இனி முன்னேற்றப்பாதையை நோக்கி பயணிப்பீர்கள். பிரச்சனைகளை சமாளிக்கக் கூடிய மனோபலம் உங்களுக்கு கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வீண் சந்தேகம் விலகும். குடும்ப வருமானம் உயரும். விலை உயர்ந்த ஆபரணங்கள், வீடு வந்து சேரும். வாங்கிய கடனில் வட்டியை மட்டுமே கட்டிக்கொண்டிருந்தீர்களே! இனி அசலில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். நாடாளுபவர்கள், வேற்று மொழிக்காரர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். அடிக்கடி தொந்தரவு தந்த வாகனம் இனி சீராக ஓடும். ஆனால் 10.5.2013 முதல் 6.7.2013 வரை உடல் உஷ்ணம் அதிகமாகும். கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.

மே வரை உங்கள் ராசிக்குள்ளேயே குரு அமர்ந்து ஜென்மகுருவாக நீடிப்பதால் அடிக்கடி கோபப்பட்டுக் கொள்வீர்கள். சில நேரங்களில் நிம்மதியின்றி தவிப்பீர்கள். தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும் போதெல்லாம் அதை தட்டி வைக்கப்பாருங்கள். உங்களைப் பற்றி எல்லோரும் தவறாக நினைப்பதாக நீங்களே முடிவெடுத்துக் கொள்ளாதீர்கள். ஒற்றைத் தலை வலி, சுவாசக் கோளாறு, இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைவு, கால்சியம் சத்துக் குறைவு என வரக்கூடும். நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். பாதை மாறிச் செல்பவர்களின் நட்பை தவிர்த்து விடுங்கள். ஆனால் 29.5.2013 முதல் குருபகவான் உங்கள் ராசியை விட்டு விலகி 2-ல் அமர்வதால் கோபம் குறைந்து கனிவு பிறக்கும். கடுமையாக பேசாமல் இங்கிதமாகவும், இதமாகவும் பேசி சில காரியங்களை சாதிப்பீர்கள். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேர்வீர்கள். உங்களுக்குள் கலகமூட்டியவர்களை ஒத்துக்கித்தள்ளுவீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தையும் ஒருவழியாக தந்து முடிப்பீர்கள். பிள்ளைகளை நீங்கள் எதிர்பார்த்த நல்ல பள்ளி, கல்லூரிகளில் சேர்ப்பீர்கள்.

இந்த ஆண்டு முழுக்க உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டில் ராகு வலுவாக அமர்ந்திருப்பதால் சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் உதவுவார்கள். எதிர்ப்புகள் அடங்கும். உங்களை பார்த்தும் பார்க்காமல் சென்ற உறவினர்களெல்லாம் இனி தேடி வருவார்கள். வெளிவட்டாரத்தில் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். வி.ஐ.பிகளின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் உதவியும் உண்டு. அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் முழுமையடையும். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். 12-ம் வீட்டில் கேது தொடர்வதால் சுபச் செலவுகள் அதிகமாகும். கல்யாணம், காதுகுத்து, சீமந்தம் என வீடு களை கட்டும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சில காரியங்களை இரண்டு மூன்று முறை அலைந்து முடிக்க வேண்டி வரும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். யாருக்கும் ஃபைனான்ஸ் மூலம் பணம் வாங்கித் தரவோ, பொறுப்பேற்கவோ வேண்டாம்.

வியாபாரிகளே! வட்டிக்கு வாங்கி கடையை விரிவுபடுத்தி நட்டப்பட்டீர்களே! இனி உங்களின் அணுகுமுறையை மாற்றி லாபமீட்டுவீர்கள். பெரிய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் கூடிவரும். கெமிக்கல், ஹோட்டல்,ரியல் எஸ்டேட் வகைகளால் லாபம் உண்டு. கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் பணிந்து போவார்கள்.

உத்யோகஸ்தர்களே! பணிகளை முடிப்பதிலிருந்த தேக்கநிலை மாறும். மேலதிகாரி உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வருட தொடக்கத்திலேயே பதவியுயர்வு.சம்பள உயர்வு மற்றும் புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். வெளிநாட்டுத்தொடர்புள்ள நிறுவனங்களிலிருந்து உங்களுக்கு அழைப்பு வரும்.

கன்னிப்பெண்களே! இனி உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். தாமதமான திருமணம் கூடி வரும். கண்ணுக்கு அழகான கணவர் வந்தமைவார். பெற்றோருடன் இருந்து வந்த மனஸ்தாபங்கள் விலகும். தடைபட்ட உயர்கல்வியை மீண்டும் தொடர்வீர்கள். மாணவர்களே! அதிகாலையில் எழுந்து படிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். கவிதை, கட்டுரை, இலக்கியப் போட்டிகளிலும் திறமையை வெளிப்படுத்தி பரிசு, பாராட்டுகளை பெறுவீர்கள்.


அரசியல்வாதிகளே! புதிய பொறுப்புகளை தலைமை ஒப்படைக்கும். சகாக்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆதாரமில்லாமல் எதிர்கட்சியினரை விமர்சிக்க வேண்டாம். கலைத்துறையினர்களே! இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சம்பளப் பாக்கி கைக்கு வரும். அரசால் ஆதாயமுண்டு.

இந்த 2013-ம் ஆண்டு உங்களை சாதனையாளராக மாற்றுவதுடன் அடிப்படை வசதிகளையும் அதிகப்படுத்தும்.

பரிகாரம்

**கோயம்புத்தூர் அருகிலுள்ள மருதமலையில் வீற்றிருக்கும் பாம்பாட்டி சித்தரையும், முருகப் பெருமானையும் வணங்குங்கள். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு உதவுங்கள். அதிரடி முன்னேற்றம் உண்டாகும்.**

# மிதுனம்



தீவிர யோசனைக்குப் பின் முடிவெடுப்பவர்களே! உங்களுக்கு 2-வது ராசியில் இந்த புத்தாண்டு பிறப்பதால் எதிர்பார்த்திருந்த தொகை வந்து சேரும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். அனுபவ பூர்வமாகவும், எதார்த்தமாகவும் பேசுவீர்கள். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். குடும்பத்தில் குழப்பங்களை ஏற்படுத்திய உறவினர்கள், நண்பர்களின் சுயரூபத்தை கண்டறிந்து ஒதுக்குவீர்கள். கணவன்- மனைவிக்குள் இனி மனம் விட்டுப் பேசுவீர்கள்.

வருடம் பிறக்கும் போது ராகு 5-ம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளின் பிடிவாதம் அதிகரிக்கும். மகளுக்கு வரன் தேடும் போது மணமகனின் பழக்கவழக்கங்களை நன்கு விசாரித்து முடிவெடுப்பது நல்லது. பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் கவனமாக இருங்கள். ஒற்றை தலை வலி, இரத்த சோகை, மூட்டு வலி வரக்கூடும். தாய்மாமன், அத்தை வகையில் செலவுகள் வந்துப் போகும். இப்படி நடந்திருக்குமோ! அப்படி சொல்லியிருப்பார்களோ! என்று எல்லோரையும் சந்தேகக் கண்ணுடன் தான் பார்ப்பீர்கள். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள். பூர்வீக சொத்தை கவனமாக கையாளுங்கள். ஆனால் கேது 11-ம் வீட்டில் தொடர்வதால் வற்றிய பணப்பை நிரம்பும். கைமாற்றாக இருந்த கடனையும் தந்து முடிப்பீர்கள். ஷேர் மூலம் பணம் வரும். அயல்நாட்டிலிருக்கும் உறவினர்கள், நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வி.ஐ.பிகள், நாடாளுபவர்களின் நட்பை சரியாக பயன்படுத்திக் கொள்வீர்கள். வீட்டில் தடைபட்ட சுபகாரியங்கள் ஏற்பாடாகும்.

சனிபகவான் ராசிக்கு 5-ம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். அவர்களின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்து நிறைவேற்ற பாருங்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்யோகத்தின் பொருட்டு அவர்களை பிரிய வேண்டியது வரும். குலதெய்வ பிராத்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

மே 28-ந் தேதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 12-ம் வீட்டில் நிற்பதால் அநாவசிய செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு கொஞ்சம் கடன் வாங்கித்தான் செய்ய வேண்டியிருக்கும். பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை நல்ல விதத்தில் முடியும். மே 29-ந் தேதி முதல் குருபகவான் வருடம் முடிய உங்கள் ராசிக்குள்ளேயே ஜென்மகுருவாக அமர்வதால் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். தேனொழுக பேசுகிறார்கள் என்று யாரையும் நம்பி விட வேண்டாம். அடிக்கடி கோபப்பட்டு டென்ஷனாவீர்கள். உணவில் உப்பு, காரத்தை குறைத்துக் கொள்ளுங்கள். மஞ்சள் காமாலை வரக்கூடும். குடிநீரை கொதிக்க வைத்து குடியுங்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து போவது நல்லது. பிள்ளைகள் சில நேரங்களில் உங்களை புரிந்து கொள்ளாமல் பேசுவார்கள். உணர்ச்சிவசப்படாமல் எந்த முடிவும் எடுப்பது நல்லது. வீடுகட்ட வங்கிகளில் பணம் வாங்கியிருந்தவர்கள் சில தவணைகளை குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த முடியாத அளவிற்கு தர்ம சங்கடத்தில் மூழ்கக் கூடும். விருந்தினர், உறவினர் வருகை அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை இரவல் தர வேண்டாம். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

ராசிக்கு 6-ம் வீட்டில் சுக்ரன் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் சின்ன சின்ன விபத்துகள் வரக்கூடும். வீட்டில் குடி நீர், கழிவு நீர் குழாயில் அடைப்பு வரும். டி.வி., ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின் போன்ற சாதனங்கள் பழுதாகும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சளித் தொந்தரவு இருக்கும். அநாவசியச் செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். செவ்வாய் 8-ல் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் சகோதரர்களுடன் கருத்துவேறுபாடுகள் வரும். பூர்வீகச் சொத்து விஷயங்களை சுமுகமாக பேசித் தீர்க்கப் பாருங்கள். மனைவிக்கு சிறுசிறு அறுவை சிகிச்சை, கருத்துமோதல் வரக்கூடும். அரசாங்க அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

வியாபாரிகளே! மற்றவர்கள் சொல்கிறார்கள் என நினைத்து பெரிய முதலீடுகளை போட்டு மாட்டிக் கொள்ளாதீர்கள். பழைய சரக்குகள் விற்றுத்தீரும். பழைய வாடிக்கையாளர்களை ஈர்க்க புது திட்டங்களை செயல்படுத்துவீர்கள். அனுபவமிகுந்த வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். உணவு, எலக்ட்ரிக்கல்ஸ், ட்ராவல்ஸ், ஸ்டேஷனரி, பப்ளிக் கேஷன், கட்டிட உதிரி பாகங்களால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்ப்பீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள்.

உத்யோகஸ்தர்களே! வருட முற்பகுதியில் வேலைச்சுமை அதிகரிக்கத்தான் செய்யும். சிலருக்கு திடீர் இடமாற்றமும் உண்டு. சக ஊழியர்களின் தவறுகளை மேலிடத்திற்கு சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். சக ஊழியர்கள் உங்களை உரசிப் பார்ப்பர்கள். பிற்பகுதியில் மன நிம்மதியுண்டு. சம்பள பாக்கியை போராடி பெறுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.


கன்னிப்பெண்களே! காதல் விவகாரத்தை தள்ளி வையுங்கள். பெற்றோரின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். உடல் உஷ்ணத்தால் வயிற்று வலி, வேனல் கட்டி வந்து நீங்கும். மாணவர்களே! ஏனோ தானோ என்றில்லாமல் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். கணிதம், அறிவியல் பாடங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். கூடா நண்பர்களை தவிர்த்து நல்ல நட்புச் சூழலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அரசியல்வாதிகளே! உட்கட்சிப் பூசலில் தலையிடாமல் ஒதுங்கியிருங்கள். இருக்கும் பதவியை தக்க வைத்துக் கொள்ள கொஞ்சம் போராட வேண்டிருக்கும். கலைத்துறையினர்களே! தள்ளிப் போய்க் கொண்டிருந்த வாய்ப்பு இனி தேடி வரும். உங்களின் படைப்புகளைப் பற்றி கிசுகிசுக்கள் வரத்தான் செய்யும். இந்த 2013-ம் ஆண்டு அவ்வப்போது உங்களை அலைக்கழித்தாலும், புதிய அணுகுமுறையால் வெற்றி பெற வைக்கும்.

பரிகாரம்

**சிதம்பரத்தில் அருள்பாலிக்கும் தில்லைக் காளியம்மனை உங்களின் ஜென்ம நட்சத்திரத்தன்று குங்கும அர்ச்சனை செய்து வணங்குங்கள். மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள் மகிழ்ச்சி தங்கும்.**

## கடகம்



கள்ளம் கபடமற்ற பேச்சால் கவர்பவர்களே! உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் சுக்ரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதையும் சாதித்துக் காட்டும் மன வலிமை பிறக்கும். எதிர்பார்த்து காத்திருந்த தொகை இனி கைக்கு வரும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உங்கள் பேச்சுக்கு முக்கியத்துவம் தருவார்கள். பூர்வீக சொத்து பங்கை கேட்டு வாங்குவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத்தை மனதில் கொண்டு சொத்து சேர்ப்பீர்கள். அவர்களின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். மகன் உங்களைப் புரிந்துக் கொள்வாள். அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் புது வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல மணமகன் அமைவார். கண்டும் காணாமல் இருந்த உறவினர்கள் எல்லாம் இனி உங்களின் வளர்ச்சியை பார்த்து வலிய வந்துப் பேசுவார்கள். அவர்களின் வீட்டு விசேஷங்களில் முன்னுரிமை கிடைக்கும். பாதியிலேயே நின்றுபோன வீட்டைக் கட்டி முடிக்க எதிர்பார்த்த வங்கிக் கடன் உதவி கிடைக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். என்றாலும் உங்கள் ராசியிலேயே இந்த புத்தாண்டு பிறப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். அவ்வப்போது உடல்நிலை லேசாக பாதிக்கும்.

மே 28-ந் தேதி வரை குருபகவான் லாப வீட்டில் நிற்பதால் பிரபலங்கள், நாடாளுபவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொடங்கிய பணிகள் உடனே முடியும். குடும்பத்தில் இனம் புரியாத கவலை, வாக்குவாதங்கள் என இருந்ததே! இனி வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வருமானத்தை உயர்த்த புதுவழிகளில் முயற்சி செய்வீர்கள். திடீர்யோகம், பணவரவு உண்டு. பழைய கடனில் ஒருபகுதியை தீர்க்க வழி பிறக்கும். மூத்த சகோதரர் முன்வந்து உதவுவார். உங்களையும் அறியாமல் உங்களிடம் இருந்து வந்த தாழ்வுமனப்பான்மை நீங்கும். இனி நேர்மறை எண்ணங்கள் உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். பெரிய பதவிகள் தேடி வரும். தடைபட்ட வீடு கட்டும் பணியை தொடர்வீர்கள். தூரத்து சொந்த-பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவ முன்வருவார்கள். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 12-ம் வீட்டில் சென்று மறைவதால் திடீர் பயணங்கள், செலவுகள் அதிகரிக்கும். ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். ஆடம்பரச் செலவுகளை குறைக்கப்பாருங்கள். நன்கு அறிமுகமாகாதவர்களை வீட்டில் சேர்க்க வேண்டாம். நீண்ட நாட்களாக தரிசிக்க நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். கோவில் கும்பாபிஷேகம் மற்றும் சகோதரங்களின் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

பிள்ளைகளிடம் அதிக நேரம் பேசி அவர்களின் அடிமனதிலிருக்கும் தாழ்வுமனப்பான்மையை குறைக்கப் பாருங்கள். அவர்களின் உயர்கல்வியில் கூடுதல் அக்கறை செலுத்துவீர்கள். மகனுக்கு நல்ல வரன் அமையும். நினைத்தபடி வேலை கிடைக்கும். மகளுக்கு அயல்நாட்டில் படிக்கும் வாய்ப்பு கிட்டும். வீட்டை விரிவுப்படுத்தி கட்டுவீர்கள். வேற்றுமதத்தினர்கள் உதவுவார்கள். 7-ல் செவ்வாய் நிற்பதால் மனைவியுடன் விவாதங்கள், சந்தேகம், பிரிவு வரும். முன்கோபத்தை குறைக்கப்பாருங்கள். உடன்பிறந்தவர்களால் மனஸ்தாபங்கள் வெடிக்கும். பூர்வீகச் சொத்து விஷயங்களில் கவனம் தேவை.

இந்த வருடம் முழுக்க ராசிக்கு 4-ம் வீட்டில் சனியும், ராகுவும் அமர்ந்திருப்பதால் தாயாருக்கு நரம்புக் கோளாறு, ரத்த அழுத்தம் வரும். தாய்வழி உறவினர்களால் அலைச்சலும்,மனக்கசப்பும் வந்து நீங்கும். தாய்வழி சொத்தை விற்று புது சொத்து வாங்குவீர்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். வாகனம் விபத்துக்குள்ளாகும். வருமானம் அதிகரித்தாலும் சேமிக்க முடியாமல் கையிருப்பு கரையும். நெடுந்தூர, இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. யாருக்கு ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். நண்பர்களுடன் வீண் பேச்சைக் குறைக்கப்பாருங்கள். இலவசமாக அறிமுகமாகும் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடாதீர்கள்.

6-ம் வீட்டில் சூரியன் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். சொத்து சேரும். தடைபட்ட காரியங்களை முழுவேகத்துடன் முடித்துக் காட்டுவீர்கள். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. சிலருக்கு வேலை கிடைக்கும். தகப்பானருடன் இருந்த கருத்து மோதல் நீங்கும். தந்தை வழி சொத்தை அடைவதில் இருந்த தடைகள் விலகும். ஜீன் மாதத்திலிருந்து குரு 12-ம் வீட்டிற்கு வருவதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். ஆன்மீகத்தின் ஆழத்திற்கு செல்வீர்கள். கோவில் திருவிழாவை முன்னின்று நடத்துவீர்கள். பணவரவு உண்டு. நினைத்திருந்த டிசைனில் ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். மனைவிக்கு அவ்வப்போது உடல்நலக்குறைவும், மருத்துவச் செலவும் வந்துபோகும்.

வியாபாரிகளே! வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த பிட் நோட்டிஸ், வானொலி விளம்பரம் என செலவிடுவீர்கள். பக்கத்து கடைக்காரருடன் இருந்த கருத்து மோதல்கள் விலகும். வேலையாட்கள் அடிக்கடி மாறிக் கொண்டேயிருப்பார்கள். கெமிக்கல், கமிஷன், வாகன உதிரி பாகங்களால் லாபமடைவீர்கள். அரசு கெடுபிடிகள் தளரும். பங்குதாரர்களின் துரோகங்களை மறந்து பழைய நிலைக்கு திரும்புவீர்கள். பாக்கிகள் வசூலாகும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பழைய சரக்குகள் விற்றுத்தீரும். புதிய தொழிலில் கால்பதிக்கும் முன்பு அனுபவஸ்தர்களிடம் ஆலோசனை செய்யுங்கள்.

மாணவர்களே! ஏனோ தானோ என்று படிக்காமால் அதிக நேரம் ஒதுக்கி படியுங்கள். விடைகளை எழுதிப்பாருங்கள். வகுப்பறையில் அரட்டைப் பேச்சு வேண்டாம். நண்பர்களுடன் மோதல்கள் வந்துப் போகும். விளையாடும் போது சிறுசிறு காயங்கள் ஏற்படக்கூடும்.

அரசியல்வாதிகளே! தலைமையுடன் நெருக்கமாக இருந்தாலும் அவரின் சொந்த விஷயங்களில் தலையிடாமலிப்பது நல்லது. சகாக்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். கலைத்துறையினர்களே! வீண் வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். பழைய நிறுவனங்கள் உங்களை அழைத்து பேசும். அனுபவ அறிவாலும், சகிப்புத் தன்மையாலும் சாதிக்கும் வருடமிது.

பரிகாரம்

**சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் வீற்றிருக்கும் யோக பைரவரை தேய்பிறை அஷ்டமி திதியில் சென்று வணங்குங்கள். தாயில்லா பிள்ளைகளுக்கு உதவுங்கள். நல்லது நடக்கும்.**

## சிம்மம்



எதிலும் புதுமையைப் புகுத்தும் நீங்கள் புகழ்ச்சிக்கு மயங்குபவர்கள். தைரியஸ்தானமான 3-ம் வீட்டில் சனிபகவான் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் திடீர் யோகம்.பணவரவு உண்டு. பழைய பிரச்சனைகள் ஓயும். சவாலான காரியங்களையும் சாதாரணமாக முடிக்கும் வல்லமை பிறக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு முக்கியத்துவம் தருவார்கள். எதிர்பார்த்த விலைக்கே பழைய சொத்தை விற்பீர்கள். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். வெளிநாட்டிலிருப்பவர்கள், வெளிமாநிலத்தவர்களுடன் சேர்ந்து தொழில் செய்யும் யோகம் உண்டாகும். புத்தாண்டு பிறக்கும் போது செவ்வாய் ராசிக்கு 6-ம் வீட்டில் நிற்பதால் தொட்டது துலங்கும். எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். பிரபலங்களின் ஆதரவால் சில வேலைகளை முடிப்பீர்கள். இழுபறியாக இருந்த பூர்வீகச் சொத்துப் பிரச்சனைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வெகுநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்பொழுது நிறைவேறும். தாய்மாமன், அத்தை வழியில் இருந்து வந்த மனஸ்தாபங்கள் விலகும். ஆனால் உங்களுக்கு 12-வது ராசியில் இந்த புத்தாண்டு பிறப்பதால் வீண் அலைச்சலும், திடீர் பயணங்களும் அதிகரிக்கும். அத்தியாவசியச் செலவுகளால் கையிருப்பு கரையும்.

வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 3-ல் ராகு தொடர்வதால் புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பெரிய பதவியில் அமருவீர்கள். பேச்சில் இருந்த தடுமாற்றம் நீங்கும். வழக்குகளில் சாதகமான தீர்ப்பு வரும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் விலகும். அவர்களால் உதவிகளும் கிடைக்கும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். வேற்றுமதம், மொழி, இனத்தவரால் திடீர் திருப்பம் உண்டாகும். 9-ம் வீட்டில் கேது நிற்பதால் சேமிப்புகள் கரையும். அப்பாவுக்கு நெஞ்சு வலி, மூட்டு வலி வந்துப் போகும். அவருடன் வீண் விவாதங்கள் வெடிக்கும். வாகனத்தை இயக்கும் போது கவனத்தை சிதற விடாதீர்கள். சிறு சிறு விபத்துகள் வரக்கூடும். வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் சென்று வருவீர்கள். சொந்த ஊர் கோவில் திருவிழாவை சொந்த செலவில் நடத்துவீர்கள். அடிக்கடி வெளியூர் பயணம் செல்ல வேண்டி வரும்.

28.5.2013 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 10-வது வீட்டில் தொடர்வதால் அதுவரை நான்கைந்து வேலைகளை இழுத்துப் போட்டு செய்ய வேண்டியது வரும். உத்யோகத்திலும் மறைமுக எதிர்ப்புகளும், இடமாற்றங்களும் வரக்கூடும். எனவே அலுவலகத்தில் அதிகம் பேச வேண்டாம். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பிரபலங்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் தர வேண்டாம். திடீரென அறிமுகமாகுபவர்களை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். பழைய கடன் பிரச்சனைகள் அவ்வப்போது மனசை வாட்டும். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 11-ம் வீடான லாப வீட்டில் அமர்வதால் உங்களின் புகழ், கௌரவம் உயரும். பணவரவு அதிகரிக்கும். மூத்த சகோதரர் பகையை மறந்து வலிய வந்து பேசுவார். பொது விழாக்கள், கல்யாண, கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். பிள்ளைகள் உங்களின் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். அவர்களின் உயர்கல்வி, உத்யோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். பாதியிலேயே நின்றுபோன வீடு கட்டும் பணியை இனி தொடங்குவீர்கள். வங்கியில் லோன் கிடைக்கும். தீவிரமாக வேலைத் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலைக் கிடைக்கும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். சித்தர்கள், மகான்களின் ஆசி கிட்டும். குழந்தை பாக்யம் கிடைக்கவில்லையே என வருந்தினீர்களே! இந்த வருடத்தில் வாரிசு உருவாகும். மகனின் கல்யாணத்தை கோலாகலமாக நடத்துவீர்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வாடகை வீட்டிலிருந்து சிலர் சொந்த வீட்டிற்கு குடி புகுவீர்கள்.

வியாபாரிகளே! பற்று வரவு உயரும். சனி 3-ல் சாதகமாக இருப்பதால் பிரபலங்களின் உதவியால் கடையை விரிவுபடுத்துவீர்கள். புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கெமிக்கல்,துணிக்கடை, ஹோட்டல் வகைகளால் லாபமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். புது ஒப்பந்தங்கள் கூடி வரும்.

உத்யோகஸ்தர்களே! மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்து பார்த்தும் நல்ல பெயர் கிடைக்கவில்லையே! இனி அந்த அவலநிலை மாறும். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த பதவியுயர்வு, சம்பள உயர்வு எல்லாம் ஜீன் மாதத்திலிருந்து கிடைக்கும். உங்களின் தனித்திறமையை கண்டு மேலதிகாரி பாராட்டுவார். சக ஊழியர்களின் ஆதரவால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

கன்னிப்பெண்களே! போலித்தனமாக பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள். உங்கள் தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும். கண்ணுக்கழகான கணவர் வந்தமைவார். மாணவர்களே! பள்ளியில் வீண் அரட்டையை குறைத்துவிட்டு படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். விளையாட்டிலும் பதக்கம் கிடைக்கும். அரசியல்வாதிகளே! எதிர்கட்சிக்காரர்களின் விமர்சங்களை கண்டுக்கொள்ளாதீர்கள்.

கலைத்துறையினர்களே! காத்திருந்த வாய்ப்புகள் கூட நூலிழையில் தவறிப்போனதே! இனி பெரிய நிறுவனங்கள் உங்களை அழைத்துப் பேசும். உங்களின் படைப்புத் திறன் வளரும்.

இந்த 2013-ம் ஆண்டு வசதி, வாய்ப்புகளையும், பதவி பணவரவையும் தருவதாக அமையும்.

பரிகாரம்

**மேல்மருவத்தூர் அருகிலுள்ள அச்சிறுப்பாக்கம் எனும் ஊரில் அருள்பாலிக்கும் ஆட்சீஸ்வரர் மற்றும் உமையாட்சீஸ்வரரையும் பிரதோஷ நாளில் சென்று வணங்குங்கள். இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள். மேலும் முன்னேறுவீர்கள்.**

## கன்னி



மன்னிக்கும் குணம் உள்ள நீங்கள், செய்நன்றி மறவாதவர்கள். குருபகவான் ராசிக்கு 9-ம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். பிள்ளை பாக்யம் உண்டு. வீட்டில் தள்ளிப்போன கல்யாணம், கிரக பிரவேசம் நல்ல விதத்தில் நடக்கும். மனைவிவழி உறவினர்களால் ஆதாயமுண்டு. மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். நெஞ்சு வலியால் சோர்ந்திருந்த தந்தையாரின் உடல் நிலை சீராகும். வங்கியில் வாங்கியிருந்த கடனை அடைப்பீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

உங்கள் ராசிக்கு லாப வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்த புத்தாண்டு பிறப்பதால் வருமானம் உயரும். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். மூத்த சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத்தாங்கல் நீங்கும். ஷேர், கமிஷன் வகைகளால் பணம் வரும். பாதியிலேயே நின்று போன வீடு கட்டும் வேலையை இனி விரைந்து முடிப்பீர்கள். சிலர் இருக்கும் வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவார்கள். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பால் தெளிவடைவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

செவ்வாய் 5-ம் வீட்டில் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே சென்று திருத்தப்பாருங்கள். பிள்ளைகளை அவர்கள் விரும்பும் பாடப்பிரிவில் போராடி சேர்ப்பீர்கள். அரசு அங்கீகாரம் இல்லாத கல்வி நிறுவனங்களில் பிள்ளைகளை சேர்க்க வேண்டாம்.

கர்ப்பிணிப் பெண்கள் உணவு, மருந்து விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. குழந்தையின் வளர்ச்சியை அவ்வப்போது பரிசோதித்துக் கொள்வது நல்லது. உடன்பிறந்தவர்களால் வீண் அலைச்சலும், செலவுகளும் இருக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சனையை முடிந்த வரை பேசித் தீர்ப்பது நல்லது. சொத்து விற்பது வாங்குவதில் வில்லங்கம் ஏதாவது இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் அமர்வதால் ஓய்வெடுக்க முடியாமல் அடுத்தடுத்து வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருக்கும். எதிலும் அலட்சியமாக இல்லாமல் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும். அரசு அங்கீகாரம் இல்லாத வங்கிகளில் வைப்புத் தொகை வைக்க வேண்டாம். முக்கிய பணிகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. உத்யோகத்தில் அடிக்கடி இடமாற்றம் வரும். தாயாருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும்.

இந்தாண்டு முழுக்க சனிபகவான் ராசிக்கு 2-ம் வீட்டில் அமர்ந்து பாதச் சனியாக தொடர்வதால் வீண் வாக்குவாதங்களையெல்லாம் தவிர்க்கப்பாருங்கள். காலில் அவ்வப் போது அடிபடும். கண்ணை பரிசோதித்துக் கொள்ளுங்கள். பொது இடங்களில் யாரையும் தாக்கிப் பேச வேண்டாம். திடீர் பணவரவு, செல்வாக்கு எல்லாம் உண்டு. என்றாலும் வரவுக்கு மிஞ்சிய செலவுகளே அதிகமாக இருக்கும். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். உங்களின் நிதி நிலை தெரியாமல் உறவினர்கள், நண்பர்களில் சிலர் பண உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள்.

வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 2-ம் வீட்டிலேயே ராகுவும் தொடர்வதால் பேச்சில் அதிகம் கடுமை காட்டாதீர்கள். சில சமயங்களில் நீங்கள் விளையாட்டாக பேசப் போய் அது விபரீதத்தில் போய் முடியும். குடும்பத்தில் சிறு சிறு கூச்சல் குழப்பங்கள் வந்து போகும். கேது 8-ம் வீட்டில் நிற்பதால் திடீர் பயணங்கள், செலவுகளால் திண்டாடுவீர்கள். கை, காலில் காயம், வயிற்றுக் கோளாறு, மூட்டு வலி மற்றும் நெஞ்சு எரிச்சல் வந்து நீங்கும்.

கணவன்-மனைவிக்குள் சின்ன சின்ன பனிப்போர் வரும் என்றாலும் ஒற்றுமைக்கு குறைவிருக்காது. வாகனத்தில் செல்லும் போது தலைக்கவசம் அணிந்துச் செல்லப்பாருங்கள். சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும்.

வியாபாரிகளே! பக்கத்துக் கடைக்காரரை பார்த்து பெரிய முதலீடுகளைப் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். வேலையாட்களிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. கமிசன், ரியல் எஸ்டேட்,அரிசி-எண்ணெய் மண்டி மூலம் லாபம் உண்டு. பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் வருவார்கள். பங்குதாரர்களால் விரயம் வரும்.

உத்யோகஸ்தர்களே! மே 29-ந் தேதி முதல் குரு 10-ல் நுழைவதால் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். கால நேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரும். உயரதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் குறைகளில் கவனம் செலுத்தாதீர்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். வழக்கால் நெருக்கடிகள் வந்து நீங்கும். புது வாய்ப்புகளை யோசித்து ஏற்பது நல்லது. இடமாற்றம் இருக்கும்.

கன்னிப்பெண்களே! பொய்க் காதலை நினைத்து வருந்தாதீர்கள். உங்களின் படிப்புக்கும், தகுதிக்கும் ஏற்றாற்போல நல்ல மணமகன் அமைவார். தாயாரின் அறிவுரையை ஏற்கப்பாருங்கள். மாணவர்களே! தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணமிருந்தால் மட்டும் போதாது, ஓயாது படித்து விடைகளை எழுதி பாருங்கள். அரசியல்வாதிகளே! தலைமையிடம் விட்டுக் கொடுத்து போங்கள். கலைஞர்களே! அரசால் பாராட்டப்படுவீர்கள்.

சிக்கனமும், மௌனமும் தேவைப்படும் வருடமிது.

பரிகாரம்:

**கும்பகோணம் அருகிலுள்ள திருபுவனத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீசரபேஸ்வரரை சனிக் கிழமையன்று வணங்குங்கள். ஈமச்சடங்கிற்கு உதவுங்கள். மகிழ்ச்சி தங்கும்.**

## துலாம்



மற்றவர்களின் வலி, வருத்தங்களை அறிந்து ஆறுதல் சொல்பவர்களே! உங்கள் ராசிக்கு 10-வது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். சாணக்கியத்தனமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உங்களிடம் கடன் வாங்கி ஏமாற்றியவர்கள் பணத்தை திருப்பித் தருவார்கள். கைமாற்றாகவும், கடனாகவும் நீங்கள் வாங்கியிருந்த பணத்தையும் திருப்பித் தருவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். மகனின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். வருடம் பிறக்கும் போது செவ்வாய் 4-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். தாயாருக்கு ஆரோக்ய குறைவு, வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் வந்துப் போகும். சிலர் வீட்டை இடித்துக் கட்டுவீர்கள்.

வருடம் பிறக்கும் போது ராசிக்குள் ராகு நிற்பதால் எதிலும் ஒருவித தயக்கம், படபடப்பு, தலைச்சுற்றல், நெஞ்சு வலி, நாக்கில் கசப்பு என வந்து நீங்கும். சில சமயங்களில் முன்கோபத்தால் எடுத்தெறிந்து பேசுவீர்கள். நேரம் கிடைக்கும் போது யோகா, தியானம் செய்யத் தவறாதீர்கள். எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. 7-ம் வீட்டில் கேது அமர்வதால் கணவன்-மனைவிக்குள் ஈகோ பிரச்னை, வீண் சந்தேகத்தால் பிரிவு ஏற்படும். மனைவி உங்களின் நிறைக் குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள். மனைவிவழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வரக்கூடும்.

மே 28-ந் தேதி வரை உங்கள் ராசிக்கு 8-வது வீட்டில் குரு மறைந்திருப்பதால் மறைமுக பணவரவு உண்டு என்றாலும் செலவுகளும் இருக்கும். வீண்பழிச் சொல்லுக்கு ஆளாவீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 9-ம் வீட்டில் அமர்வதால் சாதிப்பீர்கள். மனப்போராட்டங்கள் ஓயும். கல்வியாளர்கள், தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும். பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். மனைவியுடன் இருந்த பிணக்குகள் நீங்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். கோவில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். புது வேலை கிடைக்கும். அரசு சம்பந்தப்பட்ட வேலைகள் விரைந்து முடியும். பூர்வீக சொத்தை சீரமைப்பீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். தந்தையின் உடல் நிலை சீராகும். அவருடன் இருந்த கருத்து மோதல்களும் விலகும்.

வெளிவட்டாரத்தில் உங்களின் புகழ், கௌரவம் உயரும். நீதிமன்ற வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். சமாளிக்க முடியாத பிரச்சனைகளுக்கும் தீர்வுக்கு வரும். முதுகுவலி, சர்க்கரை நோயின் தாக்கம் குறையும். உங்கள் தகுதிக் கேற்ப நல்ல வேலை அமையும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உங்களை வாழ்த்தும். சாதுக்கள் உதவுவார்கள்.

நாடாளுபவர்கள் அறிமுகமாவார்கள். அதிக சம்பளத்துடன் புதிய வேலைக் கிடைக்கும். ஆன்மீகத்தில் மனம் லயிக்கும். அரசாங்க விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். செலுத்த வேண்டிய வரித்தொகைகளை உடனுக்குடன் செலுத்துவது நல்லது. வாகனத்தில் அடிக்கடி உதிரிபாகங்களை மாற்ற வேண்டியது வரும்.

ஜன்மச் சனி தொடர்வதால் மெடிக்ளைம் எடுத்துக் கொள்ளுங்கள். ஜென்ரல் செக்கப் செய்து கொள்வது நல்லது. வெளி உணவுகள், ஊறுகாய், லாகிரி வஸ்துக்களை தவிர்ப்பது நல்லது. வாயுக் கோளாறால் நெஞ்சு வலி, செரிமானக் கோளாறு வரும். மனைவிவழியில் கொஞ்சம் அலைச்சலும், செலவும் இருக்கும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாருக்காகவும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். இரத்தத்தில் சர்க்கரையின் அளவை பரிசோதித்துக் கொள்ளுங்கள். உடல் எடை கூடும்.

வியாபாரிகளே! வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து, சந்தை நிலவரங்களை அறிந்து புதிய சரக்குகளை கொள்முதல் செய்வீர்கள். பர்னிச்சர், மருந்து, இரும்பு வகைகளால் ஆதாயம் உண்டு. அரசாங்கத்தால் இருந்த நெருக்கடிகள் நீங்கும். வேலையாட்கள் மற்றும் கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் புரிந்து கொள்ளாமல் அவ்வப்போது குடைச்சல் தந்தார்களே! இனி பணிந்து போவார்கள். பழைய பங்குதாரர்களும் தேடி வருவார்கள். வியாபாரம் செழிக்கும்.

உத்யோகஸ்தர்களே! எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்த்தும் உங்களை குறை சொல்லுவதற்கென்றே ஒரு கூட்டம் இருந்ததே! இனி அந்த நிலை மாறும். முக்கிய கோப்புகளை கவனமாக கையாளுங்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். சக ஊழியர்களால் மறைமுகப் பிரச்னைகள் இருக்கும்.

கன்னிப்பெண்களே! காதல் மற்றும் உயர்கல்வி சம்பந்தப்பட்ட குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை உணருவீர்கள். தாயார் உங்களை ஆதரிப்பார். ஆடை ஆபரணம் சேரும். தள்ளிப் போன திருமணம் கூடி வரும். விட்ட பாடத்தை மீண்டும் எழுதி வெற்றி பெறுவீர்கள்.

மாணவர்களே! அவ்வப்போது மந்தம், மறதி வரும். படிப்பில் அக்கறை செலுத்துங்கள். வகுப்பறையில் முன் வரிசையில் அமருங்கள். அரசியல்வாதிகளே! வேலைச்சுமை அதிகரிக்கும். கட்சி அறிவிக்கும் போராட்டங்களில் பங்கேற்று தலைமையின் நன்மதிப்பை பெறுவீர்கள். கலைத்துறையினர்களே! தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

இந்த 2013-ம் ஆண்டு அவ்வப்போது சுகவீனங்களை தந்தாலும் தன்னம்பிக்கையால் வெற்றி பெற வைக்கும்.

பரிகாரம்

**சென்னை திருவொற்றியூரில் அருள்பாலிக்கும் ஸ்ரீவடிவுடையம்மனை பஞ்சமி திதி நாளில் சென்று வணங்குங்கள். முடிந்தால் கண் தானம் செய்யுங்கள். நிம்மதி கிட்டும்.**

# விருச்சிகம்



தன்மானத்தை விட்டுக் கொடுக்காதவர்களே! மற்றவர்கள் தயவில் வாழ விரும்பாதவர்களே! உங்களுக்கு 9-வது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பூர்வீக சொத்தில் மாற்றம் செய்வீர்கள். உங்கள் ரசனைக் கேற்ப வீடு, வாகனம் அமையும். உறவினர் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வருடம் ஆரம்பிக்கும் போது செவ்வாய் 3-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் வீடு, மனை வாங்குவது, விற்பது சுலபமாக முடியும். சிலர் இருக்கும் வீட்டில் கூடுதலாக ஒரு அறை கட்டுவீர்கள். கைமாற்றாக வாங்கியதை தந்து முடிப்பீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மகளின் கல்யாணத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வி.ஐ.பிகளால் ஆதரவால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள்.

சுக்ரன் உங்கள் ராசிக்குள் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் இங்கிதமாகவும், இதமாகவும் பேசுவீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். கடனாக கொடுத்த பணம் கைக்கு வரும். மனைவிவழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அவர்களிடம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். தோலில் நமைச்சல் நீங்கும். வீடு வாங்க, கட்ட வங்கி லோன் கிடைக்கும். உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து உறவாடுவார்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். வெள்ளி பொருட்கள் வாங்குவீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

ராசிக்கு 6-ம் வீட்டில் கேது சாதகமாக இருப்பதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றிப் பெறுவீர்கள். புது பொறுப்புகளும், பதவிகளும் தேடி வரும். காற்றோட்டம், குடிநீர் வசதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்த வீட்டிலிருந்து எல்லா வசதிகளும் நிறைந்த வீட்டிற்கு குடிபுகுவீர்கள். பழைய பிரச்சனைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். குழந்தை பாக்யம் உண்டாகும். புது சொத்து வாங்குவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் உதவுவார்கள். எதிர்பார்த்து காத்திருந்த விசா கிடைத்து, அயல்நாடு சென்று வருவீர்கள். ஹிந்தி, தெலுங்கு மொழி பேசுபவர்களால் ஆதாயம் உண்டாகும். ராகு 12-ம் வீட்டில் மறைந்திருப்பதால் மறைமுக எதிரிகளால் ஆதாயம் உண்டு. மின்சார, சமையலறை சாதனங்கள் பழுதாகும். தாழ்வுமனப்பான்மை வந்து நீங்கும். திடீர் பயணங்களும், செலவுகளும் அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். எதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் வட சிலர் தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரை மாற்றுங்கள்.

மே 28-ந் தேதி வரை உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் குரு அமர்ந்திருப்பதால் வர வேண்டிய பணம் கைக்கு வரும். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசி சில முக்கிய முடிவெல்லாம் எடுப்பீர்கள். பிள்ளைகளால் சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். மூத்த சகோதரிக்கு திருமணம் நிச்சயமாகும். உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் 8-ம் வீட்டில் மறைவதால் வேலைச்சுமை அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபங்கள் வரும். செலவினங்கள் அதிகரிக்கும். கை, காலில் அடிப்படக்கூடும். சித்தர் பீடங்களுக்கு மறவாமல் செல்லுங்கள். குலதெய்வ கோவிலை புதுப்பிப்பீர்கள்.

சனிபகவான் ராசிக்கு 12-ம் வீட்டில் ஏழரைச்சனியின் ஒருபகுதியான விரையச் சனி தொடர்வதால் இனந்தெரியாத கவலைகள் வந்துச் செல்லும். பழைய கடனை நினைத்து கலங்குவீர்கள். பணவரவு ஓரளவு இருக்கும். சிலர் உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வாகனங்களை இயக்குவதில் கவனம் தேவை. அரசாங்க அதிகாரிகள், வி.ஐ.பிகளுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். சிறுசிறு வாகன விபத்துகள் வரக்கூடும். வங்கியில் பணம் இருக்கிறதா என பார்த்து காசோலை தரப்பாருங்கள்.

வியாபாரிகளே! மற்றவர்களின் பேச்சை கேட்டு பெரிய முதலீடுகள் செய்து நட்டமானதே! இனி தரமான சரக்குகளை வாங்கி புது சலுகைகளை அறிவித்து லாபம் ஈட்டுவீர்கள். கடையை வேறிடத்திற்கு மாற்றுவீர்கள். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குங்கள். வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். பர்னிச்சர், ஹோட்டல், லாட்ஜ், ஏற்றுமதி-இறக்குமதி,நீசப்பொருட்களால் ஆதாயமடைவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள்.

உத்யோகஸ்தர்களே! உங்களுக்கு எதிராக செயல்பட்ட அதிகாரி மாற்றப்படுவார். புது அதிகாரி உங்களை மதிப்பார். உங்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் அமையும். அதிகாரிகளுடன் இருந்த மோதல் போக்கு நீங்கும். எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும். வேறு சில வாய்ப்புகளும் தேடி வரும்.

கன்னிப்பெண்களே! கூடாப்பழக்கமுள்ளவர்களின் நட்பிலிருந்து விடுபடுவீர்கள். உயர்கல்வியில் போராடி வெற்றி பெறுவீர்கள். நீண்ட கால போராட்டத்திற்கு பிறகு நினைத்தவரையே கல்யாணம் முடிப்பீர்கள். மாணவர்களே! படிப்பில் ஆர்வம் பிறக்கும். இனி சக மாணவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண் பெறவேண்டுமென்ற வைராக்கியத்துடன் படிப்பீர்கள். அரசியவாதிகளே! உங்களைப் பற்றிய வதந்திகள் நீங்கும். கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள்.

கலைஞர்களே! பட்டிதொட்டியெங்கும் உங்கள் படைப்புகள் பாராட்டு பெறும்.

சிறுசிறு தடைகள், ஏமாற்றங்களையும் கடந்து பெரிய இலக்கை எட்டிப் பிடிக்க வைக்கும் வருடமிது.

பரிகாரம்:

**தென்காசிக்கு அருகிலுள்ள திருமலைக் கோவிலில் அருள்பாலிக்கும் ஸ்ரீதிருமலைக் குமார சுவாமியை வியாழக் கிழமையன்று தரிசனம் செய்யுங்கள். ஏழை மாணவனின் கல்வி உதவுங்கள். எதிலும் ஏற்றம் கிட்டும்.**

# தனுசு



தயாள குணமும், தாராள மனசும் உள்ள நீங்கள், உலக நடப்பை உள்ளங்கையில் வைத்திருப்பவர்கள். புத்தாண்டு பிறக்கும் போது சனிபகவான் உங்களின் லாப வீட்டில் தொடர்வதால் திடீர் செல்வாக்கு, புகழ் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். பழைய காலி இடத்தை விற்று புது வீடு வாங்குவீர்கள். கடனாகவும், கைமாற்றாகவும் வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். விசேஷங்களில் முதல் மரியாதைக் கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். மூத்த சகோதரர் ஆதரவாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். பிள்ளைகள் தன் தவறை உணருவார்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். நாடாளுபவர்கள் உதவுவார்கள். கோவில் கும்பாபிஷேகத்திற்கு தலைமை தாங்குவீர்கள். வாகனம் வாங்குவீர்கள்.

மே 28-ந் தேதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டில் மறைந்திருப்பதால் மறைமுக எதிர்ப்புகள், வீண் டென்ஷன், வேலைச்சுமை, காய்ச்சல் என வந்து செல்லும். பூர்வீக சொத்து சம்பந்தமாக வழக்குகள் வேண்டாமே. சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். பணம், நகை, வீட்டுப் பத்திரங்களை கவனமாக கையாளுங்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.

உறவினர், நண்பர்களில் சிலர் உங்களை விமர்சிப்பார்கள். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் நுழைவதால் சோர்ந்துக் கிடந்த நீங்கள் துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். மகனுக்கு நீங்கள் எதிர்பார்த்ததைப் போல நல்ல குடும்பத்திலிருந்து பெண் அமையும். மகள் உங்களைப் புரிந்துக் கொள்வாள். தாயாரின் உடல் நிலை சீராகும். எதிர்பார்த்த விலைக்கே பழைய சொத்தை விற்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. தள்ளிப் போன வெளிநாட்டுப் பயணம் சாதகமாக அமையும். வேற்றுமதத்தினர், மொழியினர் உதவுவார்கள்.

உங்களுக்கு 8-வது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அவ்வப்போது பணப்பற்றாக்குறையும் வரும். என்றாலும் சமாளித்து விடுவீர்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்ளாதீர்கள். செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போது 2-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கப்பாருங்கள். பேச்சில் காரம் வேண்டாம்.

உடன்பிறந்தவர்களிடம் விட்டுக் கொடுத்து போங்கள். சிலர் வீடு மாற வேண்டிய நிர்பந்தம் உண்டாகும். முக்கிய பணிகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது.

கேது உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் வந்துப் போகும். அவர்களின் உயர்கல்வி, உத்யோகம் சம்பந்தமாக கொஞ்சம் அலைச்சல் இருக்கும். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வரக்கூடும். தாய்மாமன் வகையில் கருத்து வேறுபாடுகள் வரக்கூடும். பூர்வீக சொத்து பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்வது நல்லதல்ல.

ராகு உங்கள் ராசிக்கு 11-ம் வீட்டில் தொடர்வதால் பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி பெறுவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். புது பதவிகள் தேடி வரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

வியாபாரிகளே! தள்ளுபடி விலையில் பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். உங்கள் ரசனைக் கேற்ப கடையை விரிவுப்படுத்தி, அழகுப்படுத்துவீர்கள். வாடிக்கையாளர்களை அன்பாக நடத்துங்கள். வேலையாட்கள் அவ்வப்போது விடுப்பில் சென்று உங்களை டென்ஷனாக்குவதுடன், விவாதமும் செய்வார்கள். மருந்து, எண்டர்பிரைஸ், துணி வகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் கருத்து வேறுபாட்டால் பிரிவார்கள். புதிய பங்குதாரர்கள் வருவார்கள்.

உத்யோகஸ்தர்களே! கிடைக்க வேண்டிய பதவியுயர்வு ஏதோ காரணங்களால் தடைபட்டுப்போனதே! இனி சம்பளம் உயரும். அலுவலகப் பிரச்னைகள் மட்டுமல்லாது அதிகாரியின் சொந்த பிரச்னைகளையும் தீர்த்து வைப்பீர்கள். பெரிய பொறுப்புகளுக்கு உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். தேங்கிக் கிடந்த பணிகளையும் விரைந்து முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். சக ஊழியர்களின் சம்பள உயர்விற்காக பரிந்துப் பேசுவீர்கள்.

கன்னிப்பெண்களே! உங்களின் நீண்ட நாள் கனவு நனவாகும். தாமதமான கல்யாணம் வருடத்தின் பிற்பகுதியில் நல்ல விதத்தில் முடியும். மாதவிடாய்க் கோளாறு, தலைச்சுற்றல், தூக்கமின்மை நீங்கும். மாணவர்களே! நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வகுப்பறையில் சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அரசியல்வாதிகளே! ஆதாரமில்லாமல் யாரையும் விமர்சித்துப் பேச வேண்டாம். சகாக்கள் சிலர் உங்களை புகழ்வதை போல இகழ்வார்கள்.

கலைஞர்களே! கிடைக்கின்ற வாய்ப்பு எதுவானாலும் ஏற்றுக் கொள்ளப் பாருங்கள்.

இந்த புத்தாண்டு ஆரம்பத்தில் உங்களை அலைய வைத்தாலும் மையப் பகுதி முதல் எதிர்பாராத பணவரவு, வெற்றிகளை தரக் கூடியதாக அமையும்.

பரிகாரம்

**சமயபுரம் மாரியம்மனை நெய்விளக்கேற்றி தரிசியுங்கள். பழைய கல்வி நிறுவனத்தை புதுப்பிக்க உதவுங்கள். மேலும் வெற்றி பெறுவீர்கள்.**

## மகரம்



பெற்ற தாயையும், பிறந்த மண்ணையும் அதிகம் நேசிப்பவர்களே! உங்களுக்கு லாப வீட்டில் சுக்ரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். வீட்டில் அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். நண்பர்கள், உறவினர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

ஷேர் மூலம் பணம் வரும். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வீட்டில் கூடுதலாக ஒரு தளம் கட்டுவீர்கள். செவ்வாய் உங்கள் ராசிக்குள் உச்சம் பெற்று அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் இனி எதிர்பார்ப்புகள் யாவும் தடையின்றி நிறைவேறும். பேச்சிலே ஒரு கம்பீரம் பிறக்கும். வழக்கு சாதகமாகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். பழைய கடனையும் பைசல் செய்வீர்கள். வீடு வாங்குவது, கட்டுவது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களை சரியாகப் புரிந்துக் கொள்வார்கள். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள்.

மே 28-ந் தேதி வரை உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் குருபகவான் அமர்ந்திருப்பதால் குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல், குழப்பம் விலகும். கணவன்-மனைவிக்குள் தாம்பத்யம் இனிக்கும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். மழலை பாக்யம் கிடைக்கும். பிள்ளைகளால் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். மகளுக்கு நல்ல வரன் அமையும். நல்ல வேலை கிடைக்கும். தாய்மாமன் வகையில் உதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்து பங்கு கைக்கு வரும்.

தாயாரின் ஆரோக்யம் சீராகும். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டில் சென்று மறைவதால் மறைமுக விமர்சனம், ஏமாற்றம், இழப்பு, கவலைகள் வந்துச் செல்லும். வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். கணவன்-மனைவிக்குள் சந்தேகம், ஈகோ பிரச்னைகள் வந்துப் போகும். பணப்பற்றாக்குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். உறவினர்களுடன் பகைமை வரக்கூடும். வழக்கால் நிம்மதி இழப்பீர்கள். புகழ் பெற்ற வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அரசு காரியங்கள் தாமதமாக முடியும்.

கேது 4-ம் வீட்டில் நிற்பதால் முக்கிய கோப்புகளில் கையெழுத்திடும் முன் ஒரு முறைக்கு, பலமுறை யோசித்து கையெழுத்திடுவது நல்லது. சொத்து வாங்கும் போது தாய்பத்திரத்தை சரி பார்த்துக் கொள்வது நல்லது. தாயாருக்கு கை, கால் மற்றும் முதுகு வலி வந்து போகும். அவருடன் வீண் விவாதங்களும் வரக்கூடும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்துப் போகும்.

அவ்வப்போது தாழ்வுமனப்பான்மை தலைத்தூக்கும். மூட்டு வலி, ஒற்றை தலை வலி, இரத்த சோகை வரக்கூடும். ஆனால் 10-ம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் சவால்களை சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு இதோ, அதோ என்று இழுத்தடித்தவர்கள் இப்பொழுது திருப்பித் தருவார்கள். என்றாலும் வேலைச்சுமை, வீண் பழியும் வரக்கூடும்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் தொடர்வதால் உங்களின் நிர்வாகத் திறன் அதிகரிக்கும். வி.ஐ.பிகளின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் உதவியும் உண்டு. பணபலம் கூடும். புது பதவிகள், பொறுப்புகள் தேடி வரும். மகனுக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

சொத்துத் தகராறு தீரும். உடல் அசதி, மன சோர்வு வரும். குடும்பத்துடன் வெளி ஊருக்கு செல்லும் முன் சமையலறையில் கேஸ் இணைப்பை சரி பார்த்து செல்லுங்கள். நகை, பணம், முக்கிய பத்திரங்களை வங்கி லாக்கரில் வைப்பது நல்லது. களவுப் போக வாய்ப்பிருக்கிறது.

வியாபாரிகளே! எதைத் தொட்டாலும் நட்டத்தில் முடிந்ததே! இனி அதிரடியான திட்டங்களை தீட்டி போட்டியாளர்களை திணரடிப்பீர்கள். புதிய வேலையாட்களை நியமித்தாலும் அவர்கள் மீது ஒரு கண் வையுங்கள். பழைய பாக்கிகளும் வசூலாகும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். கூட்டுத்தொழிலில் விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்து இணைவார்கள்.

உத்யோகஸ்தர்களே! பதவி உயர்வு கிடைக்காமல் தவித்தீர்களே! அதிகாரிகளால் அலைக்கழிக்கப்பட்டீர்களே! சக ஊழியர்களாலும் தர்மசங்கடமான சூழ்நிலைக்கு தள்ளப் பட்டீர்களே! இனி அந்த அவல நிலை மாறும். எதிர்பார்த்த பதவியுயர்வு, சம்பள உயர்வு எல்லாம் இப்பொழுது கிட்டும். ஆனாலும் 10-ல் சனி தொடர்வதால் சக ஊழியர்களால் நெருக்கடிகள் வந்து நீங்கும்.

கன்னிப்பெண்களே! மனதில் மறைக்கத்தெரியாமல் வெளிப்படையாக பேசி விவகாரங்களில் சிக்கித்தவித்தீர்களே! இனி பேச்சில் அனுபவம் தெரியும். காத்திருந்தற்கேற்ப நல்ல கணவர் வந்தமைவார். மாணவர்களே! கடைசி நேரத்தில் படிப்பதை தவிர்த்து விடுங்கள். உயர்கல்வியில் விரும்பிய பாடப்பிரிவில் கொஞ்சம் போராடி சேர வேண்டி வரும். கெட்ட நண்பர்களை ஒதுக்குங்கள். அரசியல்வாதிகளே! உட்கட்சி பூசல், எதிர்கட்சியைப் பற்றி விமர்சனம் என்று நேரத்தை வீணடிக்காமல் ஆக்கப்பூர்வமாக செயல்படப்பாருங்கள்.

கலைத்துறையினர்களே! பெரிய நிறுவனம் உங்களை அழைத்துப் பேசும்.

முற்பகுதியில் முன்னேற்றப் பாதை தெரிந்தாலும், பிற்பகுதியில் தொலை நோக்குச் சிந்தனை தேவைப்படும் வருடமிது.

### பரிகாரம்

**சூரியனார் கோவிலுக்கு அருகிலுள்ள கஞ்சனூரில் அருள்பாலிக்கும் ஸ்ரீநடராஜப் பெருமானை வெள்ளிக் கிழமையில் சென்று தரிசியுங்கள். அகதிகளுக்கு உதவுங்கள். மகிழ்ச்சி தங்கும்.**

## கும்பம்



அடுத்தவர்களின் நிறை, குறைகளை இங்கிதமாக எடுத்துரைப்பதில் வல்லவர்களே! உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் சுக்ரன் அமர்ந்திருக்கையில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் மற்றவர்களின் ரசனைக் கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். ஏதாவது காரியமாக வேண்டுமென்றால் உங்கள் காலை பிடிப்பதும், கையைப் பிடிப்பதுமாக இருந்தவர்களை யெல்லாம் ஒத்துக்கித் தள்ளுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும்.

மனைவிவழி உறவினர்களால் ஆதாயமுண்டு. உங்களுக்கு பனிரெண்டாவது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் திடீர் பயணங்கள், அலைச்சல்கள், செலவுகள் அதிகரிக்கும். கல்யாணம், கிரக பிரவேசம், சீமந்தம் என வீடு களை கட்டும். பால்ய நண்பர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள்.

உங்கள் ராசிநாதன் சனிபகவான் 9-ம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பாதியிலேயே நின்று போன வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். வெற்றி பெற்ற மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். பணவரவு உண்டு என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் இருக்கும்.

நிலுவையிலிருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர்கள், நண்பர்களின் சுய ரூபத்தை தெரிந்துக் கொண்டு அதற்கேற்ப இனி செயல்படுவீர்கள். உங்களைத் தாழ்த்திப் பேசியவர்கள் திருந்துவார்கள். புது வேலை அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். ஆனால் தந்தைக்கு நெஞ்சு வலி, அலைச்சல், டென்ஷன் வந்துப் போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது.

வருடம் முடியும் வரை 3-ம் வீட்டில் கேது நிற்பதால் திடீர் பணவரவு உண்டு. அண்ணன் பக்கபலமாக இருப்பார். ஆனால் இளைய சகோதரருடன் பனிப்போர் வந்து நீங்கும். பூர்வீகச் சொத்தை சீரமைப்பீர்கள். தாயார் உங்களை ஆதரிப்பார். அவரின் உடல் நிலை சீராகும். ஷேர் மூலம் பணம் வரும். பிரபலங்கள், தொழிலதிபர்களின் நட்பு கிட்டும். அவர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ளும் அளவிற்கு நெருக்கமாவீர்கள். 9-ம் வீட்டில் ராகுவும் அமர்ந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். குலதெய்வ கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று நேர்த்திக் கடனை முடிப்பீர்கள். சித்தர்கள், ஆன்மீகவாதிகளின் ஆசி கிட்டும். அரசாங்க அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். தந்தையாருடன் மனஸ்தாபங்கள், அவருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும்.

மே 28-ந் தேதி வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 4-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். அவருக்கு நெஞ்சு வலி, சளித் தொந்தரவு வந்து நீங்கும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் உரசல்கள் வரக்கூடும்.

அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை உரிய காலக்கட்டத்தில் செலுத்தப்பாருங்கள். வாகனத்தை இயக்கும் போது அலைபேசியில் பேச வேண்டாம். ஆனால் மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் நுழைவதால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். பணவரவு உண்டு. மழலைச் செல்வம் உங்கள் இல்லம் நாடி வரும். பிள்ளைகளால் மதிப்பு, மரியாதைக் கூடும். மகளுக்கு ஏதோ ஒரு வகையில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் இப்பொழுது கூடிவரும். மகன் குடும்ப சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார். சொந்த வீடு கட்டி குடிப்புகுவீர்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமூகு தீர்வு காண்பீர்கள். மூத்த சகோதரர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வெளிநாட்டினரால் திடீர் திருப்பங்கள் ஏற்படும்.

வியாபாரிகளே! வாடிக்கையாளர்களின் தேவையறிந்து கொள்முதல் செய்யுங்கள். ஜீன் மாதம் முதல் நீண்ட நாளாக நினைத்திருந்த மாற்றங்களை செய்வீர்கள். வானொலி விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரங்களால் வியாபாரத்தை பெருக்குவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமான நிலை ஏற்படும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது கிளைகள் தொடங்குவீர்கள். மெடிக்கல், எலக்ட்ரானிக்ஸ், பெட்ரோ கெமிக்கல் வகைகளால் ஆதாயம் உண்டு. பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

உத்யோகஸ்தர்களே! அலுவலகத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் கொஞ்சம் உஷாராக இருங்கள். ஜீன் மாதம் முதல் தள்ளிப் போன பதவியுயர்வு, சம்பள உயர்வு தடையில்லாமல் கிடைக்கும். உங்களை கசக்கிப் பிழிந்து, உருகுலைய வைத்த மேலதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார். உங்களின் திறமையைக் கண்டு உயரதிகாரி வியப்பார். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்துக் கொள்வார்கள்.

கன்னிப்பெண்களே! கசந்த காதல் இனிக்கும். உயர்கல்வியில் விடுபட்ட பாடத்தை முடித்து வேலையில் சேரப் பாருங்கள். ஆடை அணிகலன்கள் சேரும். பெற்றோர் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். மாணவர்களே! தேர்வில் வெற்றியுண்டு என்று தப்புக்கணக்கு போடாமல், சதா படித்து, எழுதி பார்ப்பது நல்லது. எதிர்பார்த்தபடி நல்ல கோர்ஸில் சேருவீர்கள். அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பும் தேடி வரும். உயர்கல்வியில் வெற்றியுண்டு. அரசியல்வாதிகளே! உங்களின் நடவடிக்கைகளை தலைமை உற்று நோக்கும். உட்கட்சிப் பூசலில் தள்ளியே இருங்கள்.


கலைஞர்களே! உங்களைப் பற்றிய விமர்சனங்கள் வந்தாலும் அஞ்சமாட்டீர்கள். மூத்த கலைஞர்களின் நட்பை பெறுவீர்கள்.

முற்பகுதி நிம்மதியற்ற போக்கை தந்தாலும், மையப் பகுதி முதல் அதிரடி யோகத்தை தரும் வருடமாகும்.

### பரிகாரம்

**தஞ்சாவூருக்கு அருகிலுள்ள புன்னை நல்லூரில் அருள்பாலிக்கும் ஸ்ரீமாரியம்மனை எலுமிச்சை மாலை அணிவித்து வணங்குங்கள். வழக்கால் பாதிக்கப்பட்டவருக்கு உதவுங்கள். மகிழ்ச்சி தங்கும்.**

## மீனம்



மற்றவர்களை புண்படுத்தாமல் மணிக்கணக்கில் பேசுபவர்களே! உங்கள் ராசிக்கு லாப வீட்டில் செவ்வாய் உச்சம் பெற்றிருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் உங்களின் செல்வம், செல்வாக்கு உயரும். அனுபவப்பூர்வமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் உங்கள் வார்த்தை மதிப்பு கூடும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழைப் பொழிவார்கள். மனைவிவழியில் ஆதரவுப் பெருகும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். முன்பணம் தந்து முடிக்கப்படாமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள்.

உங்கள் ராசிக்கு 9-ம் வீட்டில் சுக்ரன் வலுவாக நிற்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் விரக்தியிலிருந்து விடுபடுவீர்கள். குழந்தை இல்லாதவர்களுக்கு வாரிசு உருவாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள். வங்கிக் கடனுக்காக காத்திருந்து, வீடு கட்டும் பணியும் பாதியிலேயே நின்று போனதே! இனி பல வழிகளிலும் உதவிகள் கிடைக்கும். கூடாப்பழக்கங்களிலிருந்து விடுபடுவீர்கள்.

வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். தாயாரின் ஆரோக்யம் திருப்திகரமாக இருக்கும். தாய்வழியில் அனுகூலம் உண்டாகும். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்களின் உதவி கிடைக்கும். இடவசதியில்லாமல் தவித்த கொண்டிருந்த வீட்டிலிருந்து காற்றோட்டம், தண்ணீர் வசதி அதிகமுள்ள வீட்டிற்கு மாறுவீர்கள். சிலர், வீட்டில் குடி நீர், கழிவு நீர் பிரச்னைகள் தீரும். குலதெய்வ கோவிலை புதுக்க உதவி செய்வீர்கள். புது வேலைக் கிடைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தில் ஒருபகுதியை தந்து முடிப்பீர்கள்.

மே 28-ந் தேதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டில் நிற்பதால் கடினமாக உழைத்து இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். சுபச் செலவுகளும், திடீர் பயணங்களும் அதிகரிக்கும். லேசான தலை சுற்றல், சலிப்பு, முன்கோபம், சில காரியங்களில் தடைகள் வந்துச் செல்லும். கல்யாணம், சீமந்தம், காதுகுத்து போன்ற அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும். மனைவி, பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்துக் கொள்ளுங்கள். அவர்களின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவமளியுங்கள். உறவினர்கள் சிலர் பணம் கேட்டு தொந்தரவு தருவார்கள். மற்றவர்களின் அறிவுரைகளை முழுமையாக நம்பி அதிரடியான முடிவுகளை எடுக்க வேண்டாம். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் சிலர் உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மே 29-ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 4-ம் வீட்டில் அமர்வதால் மனஉளைச்சல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம், மூட்டு வலி, சிறுசிறு அவமானங்கள் வரக்கூடும். தாயாருக்கு உடல் நலம் பாதிக்கும். அவருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும். தாய்வழி உறவினர்களுடன் உரசல்கள் வரும். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். சிலர் வீடு மாற வேண்டிய நிர்பந்தம் உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் சிலர் உங்களை தவறானப் போக்கிற்கு தூண்டுவார்கள். வழக்கு சம்பந்தமான விஷயங்களில் பின்னடைவு ஏற்படும்.

ராசிக்கு 2-ம் வீட்டில் கேது நிற்பதால் பேச்சில் காரம் வேண்டாம். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். பார்வையை பரிசோதித்துக் கொள்ளுங்கள். தங்க நகைகளை யாரிடமும் இரவல் வாங்கவோ, தரவோ வேண்டாம். ராசிக்கு 8-ம் வீட்டில் ராகு நிற்பதால் கணவன் மனைவிக்குள் சின்ன சின்ன மனஸ்தாபங்கள் வந்து போகும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போவது நல்லது. காய்கறி, கீரை வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். வாகனத்தில் செல்லும் போதும், சாலையை கடக்கும் போதும் கவனம் தேவை.

வருடம் முடியும் வரை அஷ்டமத்துச் சனி தொடர்வதால் விபத்துகள், ஏமாற்றங்கள், ஈகோ பிரச்னையால் குடும்பத்தில் குழப்பம், பணயிழப்பு, வீண்பழி, வழக்குகள் வந்து நீங்கும். நீரிழிவு நோய் வர வாய்ப்பிருக்கிறது. எனவே தினசரி நடைப்பயிற்சி மேற்கொள்வது நல்லது. கூடாப்பழக்கமுள்ளவர்களின் நட்பை தவிர்ப்பது நல்லது.

வியாபாரிகளே! பெரிய முதலீடுகளை தவிர்க்கவும். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த லாபத்தை குறைத்து விற்பனை செய்வீர்கள். வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மே மாதம் முதல் கணிசமாக லாபம் உயரும். உணவு, புரோக்கரேஜ், கமிசன், எலக்ட்ரிக்கல் வகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடன் மோதல்கள் வெடிக்கும்.


உத்யோகஸ்தர்களே! மேலதிகாரியால் அவ்வப்போது மன உளைச்சல் வந்தாலும், உங்களை நம்பித்தான் முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். அலுவலக சூட்சுமங்கள் அத்துபடியாகும். காலம் தாழ்த்தாமல் பணிகளை விரைந்து முடிக்கப்பாருங்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விருப்பமற்ற இடமாற்றம் உண்டு.

கன்னிப்பெண்களே! காதல் விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள். முகப்பரு, தோலில் நமைச்சல், கனவுத் தொல்லை வந்து நீங்கும். பெற்றோரை அனுசரித்துப் போங்கள். உங்களின் தகுதிக்கேற்ப நல்ல வேலை அமையும். மாணவர்களே! மொத்தமாக படித்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடாமல் அன்றைய பாடங்களை அன்றே படித்துவிடுவது நல்லது. கணிதம், அறிவியல் சம்பந்தப்பட்ட பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். அரசியல்வாதிகளே! கட்சிக்குள் நடக்கும் கோஷ்டி பூசலில் தலையிடாதீர்கள். மறைமுக எதிர்ப்புகளையும் தாண்டி ஓரளவு முன்னேறுவீர்கள்.

கலைஞர்களே! புதிய வாய்ப்புகள் வரும். ஒருபுறம் விமர்சனம் இருந்தாலும் மற்றொரு புறம் கடின உழைப்பால் சாதித்துக் காட்டுவீர்கள். அகலக்கால் வைக்காமல் ஆழம் பார்த்து காலை விட வேண்டிய வருடமிது.

பரிகாரம்

திருவள்ளூர் ஸ்ரீவீரராகவப் பெருமாளை அமாவாசையன்று வணங்குங்கள். சாலை விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவுங்கள். மதிப்புக் கூடும்.



# சைவநீதி

திருமதி. பி. முரளிகரன்

சைவசமயத்தின் தொன்மையைப்பற்றி எத்தனையோ கட்டுரைகளில் படித்திருக்கின்றோம். எனினும் நாம் சைவசமயத்தின் சிறப்புகளையும், மேன்மைகளையும் திரும்ப திரும்ப எழுதுவதும், படிப்பதும் எம் வாழ்க்கைக்கு மிக தேவையானது ஆகும். எமது சமயமான சைவத்தின் ஆழமான கருத்துக்களை பல சைவப்பெரியார்கள் தங்கள் ஆராய்ச்சிகள் மூலம் அறிந்து அதன் மகிமைகளை எமக்கு தந்துள்ளார்கள். அதனை நாமும் பின்பற்றி, நமது சந்ததியினருக்கும் கற்றுக்கொடுப்பது நமது மிகமுக்கியமான கடமையாகும். அதற்கான தளமாக எமது ''தமிழர் தகவல்'' இலவசமான இதழாக இருந்து உதவுவதை இட்டு மகிழ்வுடன் வாழ்த்திக்கொள்கின்றேன்.

எமது சமயத்தில் தேவார, திருவாசகங்களை பாடிய நாயன்மார்களின் பணியும், தொண்டும் எழுத்தில் அடங்கா. அவர்களின் இறைபக்தியயும், தொண்டுகளையும் படிக்கும்போது கரையாதோர் மனமும் கரைந்து விடும். சம்பந்தப்பெருமான் தனது 3 வயதிலேயே பராசக்தியினால் ஞானப்பால் ஊட்டப்பட்டு, அதனை சாட்டாக கொண்டு இறைவன் மேல் பதிகம் பாடி தன்னை மறந்தார். நாவுக்கரசரோ சமணசமயத்தில் இருந்து பின்புதான் சைவத்தின் உண்மையை உணர்ந்து மாறினார். இதனால் இறைவன் அவரை எத்தனையோ சோதனைக்கெல்லாம் உருவாக்கியிருந்தாலும், மனம் தளராமல் இறைவனின் நாமத்தை உச்சரித்து அவரின் திருமுகத்தை கண்டு ஆறாக கண்ணீர் வடித்தார். அவரின் சகோதரியை பார்த்து உழவாரப்பணியை தொடர்ந்து செய்தார். அக்கால அரசர்கள் பலர் இவரின் தொண்டுகளையும், பக்தியையும் பார்த்து மெய்மறந்து சமயத்தொண்டுகளுக்காக பல நிதியுதவிகளை செய்தார்கள். நாயன்மார் வரிசையிலே சுந்தரரைன் வாழ்க்கை வரலாறு மிகச்சிறப்புடையது. அவரை இறைவன் திருமணக்கோலத்தில் ஆட்கொண்டார். மணிவாசகப்பருமான் ஒருபடி மேலேசென்று, அரசன் குதிரைகள் வாங்கிவர கொடுத்த பணத்தை இறைவனின் பணிகளில் செலவுசெய்தபின், அரசனின் தண்டனைக்கு பின்பு இறைவன் காட்சிகொடுத்தார்.

தேவாரங்கள் பாடியும், சமயத்தை வளர்த்த நாயன்மார்களின் வரலாறுகளை படிப்பதிலும், அவர்களின் தேவாரங்களை பாடியும், கேட்டும் கொள்வதால் நாம் செய்த பாவ வினைகள் யாவும் பறந்தோடிவிடும்.


எமது சைவ நீதி நம் கலாசாரத்தோடும் பிணைந்து காணப்படுகின்றது. எத்தனையோ வருடங்களுக்கு முன்பே எமது மூதாதையர்கள் கைக்கொண்ட சமய பழக்க வழக்கங்களை

இன்று விஞ்ஞானரீதியாக நிரூபித்துள்ளார்கள். தமிழர்களாகிய நாம் புலம் பெயர்ந்து பல நாடுகளிலே வசித்துக்கொண்டிருக்கின்றோம். அங்கும் சமய ஆர்வலர்களால் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டு எமது இளம் சமுதாயத்தின் நல் வாழ்க்கைக்கு வித்திடப்பட்டுள்ளது. இதை நாம் யாவரும் அறிவோம். எந்த நாடாக இருந்தாலும் ஆலய விதிமுறைகள், நீதியாக இருக்கவேண்டும். சைவசமயத்தவர்களுக்கு என்று பலவிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் புலால் உண்ணாமை, மாமிசம் உண்பது யாவும் தவிர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் பொய்பேசாமை, ஏமாற்றுதல், களவுசெய்தல், புறங்கூறுதல் ஆகிய பழக்கங்களை தவிர்க்கவேண்டும். மேலே கூறப்பட்டதில் பிற்பகுதியை யாவராலும் விடக்கூடியதாக இருக்கும். அவற்றை தவிர்த்தாலே நாம் எமது சமயமரபுகளில் சார்ந்துள்ளதாக எடுத்துக்கொள்ளலாம்.

நமது சைவசமயத்தின் ஆராச்சிகளில் எத்தனையோ வேற்று மொழிபேசுவர்களும் இருந்துள்ளார்கள். அவர்களின் கண்டுபிடிப்புகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இந்தியாவில் மிகப்பெரிய ஆலயங்களில் முதலாம் இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப்பெரியகோயிலும் ஒன்று. இந்த கோயிலிலும் தேவாரம் பாடப்பட்டதாக கல்வெட்டுமூலம் தெரியவந்துள்ளது. இப்படி பல கோயில்களின் கல்வெட்டுக்களில் பல செய்திகளை நாம் அறிகின்றோம்.

நமக்கு இங்கு ஆலயங்களில் கடைப்பிடிக்ககூடிய, தொண்டு செய்து புண்ணியம் தேட பல வழிகள் உண்டு. அதில் முக்கியமாக சுத்தத்தை பேணலாம். இறைவனின் சன்னிதானத்தில் குப்பைகளை போடுவது, சுத்தமில்லாமல் வருவது, அன்னதானம் நடைபெறும் இடங்களில் உள்ளதொட்டிகளை அசுத்தப்படுத்துவது போன்றனவற்றை நாம் செய்யகூடாது. நமது சிறார்களுக்கும் பழக்கவேண்டும். ஆலயத்தில் இருக்கும் இறைவனின் அருளை நாம் பெறவேண்டுமானால் இவற்றை முதலில் பின்பற்றவேண்டும். எவ்வளவு சிரமத்தின் மத்தியில் ஆலயத்தை உருவாக்கியுள்ளார்கள். தமிழர்களின் பண்புகளில் சமயமும் சார்ந்து இருப்பதால், அவற்றை வெளிக்கொண்டுவரும் ஆலயங்களுக்கானாலும் சரி, அல்லது தமிழர் தகவல் போன்ற இலவச இழுக்காக இருந்தாலும் சரி நாம் நம்மால் ஆன உதவிகளை செய்யவேண்டும். சைவசமயத்தவர்கள் தங்கள் சமய வழி நின்று நல்ல ஒழுக்கங்களை கடைப்பிடித்து வாழ்க்கையில் இறைவனின் பேரருளை பெறவேண்டும் என்பதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும்.

சிவாய நம என்று சிந்திப்பார்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை.




# சமயமும் சம்பவங்களும்

மு.நற்குணதயாளன்

சமயங்களின் பின்னணியில் பல நூறு கதைகளும் பல நூறு சம்பவங்களும் அணிவகுத்து நிற்கின்றன. ஒரு சிலர் இவற்றை எவ்விதமான கேள்விகளுமின்றி ஏற்றுக்கொள்வதும் ஒரு சிலர் இவை எல்லாம் முற்று முழுதாக மனிதனை முட்டாளாக்குகின்ற கருத்துகள் என்று ஒதுக்கிவிடுவதும் சர்வசாதாரணமாக நடக்கின்றன. அதே நேரம் இன்னொரு சாரார் சமயம் சம்பந்தப்பட்ட விடயங்களை விமர்சிப்பது சரஜீயாக இருக்காது என்றும் அவற்றை அப்படியே விட்டுவிடவேண்டுமென்று கூறுவதையும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

எதையும் நிராகரித்தல் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளல் அல்லது நழுவிப்போதல் என்கின்ற இத்தகைய வாதங்களுக்கு அப்பால் சிந்தித்தல் என்கின்ற இன்னொரு செயற்பாடு உள்ளது என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும். இந்தப்பக்கத்தில் சமயத்தின் சம்பவங்களைப் பற்றி சிந்திப்பதே என் நோக்கமாக உள்ளது. இது முற்று முழுதாக என்னுடைய சிந்தனையில் எழுந்த கருத்தக்களே. என்னுடைய இந்தச் சிந்தனைகள் எங்காவது ஒரு இடத்தில் உங்களையும் சிந்திக்க வைத்தால் என்னைப் பாராட்டுங்கள் அல்லாமல் என் சிந்தனைகள் ரகசியமாக உங்களை எங்காவது ரணப்படுத்தினால் தயவுசெய்து பகிரங்கமாக என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு நான் தொடர்ந்து சிந்திக்க ஆரம்பிப்பேன்.

வேதம் சம்பந்தமாக ஒரு சிந்தனை. வேதம் என்பது இறைவனுடைய வாக்கு என்று சொல்லப்படுகிறது. இது உண்மையில்லை. வெறும் கற்பனையே இது இறைவன்



வாக்காக இருந்திருந்தால் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஆனால் வேதம் பற்றிய கண்டனங்கள்தானே மக்கள் மத்தியில் உள்ளது. ஆலயங்களில் சமஸ்கிருதத்தில் ப+சைகள் செய்கிறார்கள். கேட்டால் வேதத்தில்தான் இவையெல்லாம் நடைபெறுகின்றது வேதம் தமிழில் இல்லை அது செய்யா மொழி என்று காரணம் கற்பிக்கிறார்கள்.

ஒரு சாராருடைய சுயநலத்திற்காகவே வேதம் என்பது இறைவனுடைய வாக்கு அதை நூல்வடிவில் எழுதக்கூடாது எனறெல்லாம் கூறி அதனை ஓதுதல் மட்டுமே செய்து வந்தனர்.

**ஆற்றல் அழியுமென்றந் தணர்கள் நான்மறையைப்**
**போற்றியுரைத் தேட்டின புறத்தொழுதார்**

என்று திருவள்ளுவ மாலையில் குறிப்பிட்டுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். ஆனால் இநதக்காலத்தில் அது மொழிபெயர்க்கப்பட்டு புத்தகமாக வெளிவந்துவிட்டது. இது பொது நலாக ஏற்றுக் கொள்ளப்படவேயில்லை.

இராமலிங்க வள்ளலார் வேதமும் அதன் பின்னணியில் வெளிவந்த வழி நூல்களும் பிற சமுதாயத்தினருக்கு தீமையே பயக்கும் என்றும் கூறிச் சென்றுள்ளார்.

**வேதா கமங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்**
**வேதா கமத்தின் விளைவறியீர் சூதாகச்**
**சொன்னவலால் உண்மை வெளித்தோன்ற உரைத்தலிலை**
**என்ன பயனோ இவை**

என்று கூறுகிறார்.

**செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த**
**பொய்யா மொழிக்கும் பொருளொன்றே செய்யா**
**அதற்குரியவர் அந்தணரே ஆராயின் ஏனை**
**இதற்குரியர் அல்லாதார் இல்**

என்று திருவள்ளுவ மாலையில் கூறுவதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

ஆக மொத்தத்தில் வேதத்தை இறைவன் கூறிய ஒன்றாக திட்டமிட்டு மக்கள் மத்தியில் பரப்பி தமிழ்மொழி மூலம் பாடல்கள் ஆலயங்களில் தடுத்தவர்கள் யாரென்பது தெளிவாகப் புரிகிறது.

ஆதலால் இனிமேல் ஆலயங்களில் வேதம் ஓதுவதை ஒழித்துவிட்டு திருவாசகம் தேவாரம் போன்ற தமிழப்பாடல்களையே ஓதவேண்டும். அப்போதான் நாட்டில் இறையன்பு கொண்டவர் பலர் தோன்றுவர்.

# தைப்பூசத் திருநாளில்...

தைப்பூசம் - பல ஆன்மிக அற்புதங்கள் நிறைந்த புண்ணிய தினம் இது. முதன் முதலாக நீரும், அதிலிருந்து உலகமும் தோன்றியது தைப்பூசத்தன்றுதான் என்கின்றன புராண நூல்கள்.

சூரபதுமனை அழிக்க ஸ்ரீமுருகப்பெருமானுக்கு பிரம்மவித்யா சொரூபமான வேலாயுதத்தை சக்தி தேவி தந்ததும் இந்த நாளில்தான், பழநி முதலாக முருகன் திருத்தலங்களில் தைப்பூசம் வெகுவிசேஷம்!

தாமிரபரணியின் கரையில் தவமிருந்த ஸ்ரீகாந்திமதிக்கு நெல்லையப்பர் அருள்பாலித்த திருநாளும் இதுவே. தைப்பூசத்தன்று நெல்லையப்பர் கோயில் விழாக்கோலம் காணும்.

தைப்பூச திருநாளில்தான், திருஞானசம்பந்தர் பதிகம் பாடி பூம்பாவையை உயிர்ப்பித்ததாக விவரிக்கிறது மயிலாப்பூர் தலபுராணம். வள்ளலார் ஜோதியில் கலந்ததும் ஒரு தைப்பூசத்தில்தான்.

பூச நட்சத்திரத்தின் பிரதான தேவதை குரு பகவான். ஆகவே, தைப்பூசத்தன்று புனித தீர்த்தங்களில் நீராடி குருவை வழிபட கல்விஞானம் பெருகும்.

# பிரதோஷ விரதம்

– அபர்ணா பத்மநாபன்

"**ஆ! ஆ!** என்னால் முடியவில்லை. நிறுத்துங்கள், நிறுத்துங்கள்" என்று வாசுகி அலறியது. அதனுடைய அலறல் கேட்டு தேவர்களும் அசுரர்களும் பாற் கடலைக் கடைவதை நிறுத்தினர். அவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே வாசுகி ஆலகால விஷத்தைக் கக்கத் தொடங்கியது.

அமிர்தம் கிடைக்கும் என்று பாற்கடலைக் கடைந்த தேவர்களும் அசுரர்களம் விஷத்தைக் கண்டு அஞ்சி ஓட ஆரம்பித்தனர்.

வேறு எங்கு செல்வார்கள்? சிவபெருமானிடம்தான் தஞ்சம் அடைந்தனர். சிவனைத் தவிர வேறு எவராலும் அந்த விஷத்தின் தன் மையைப் போக்க முடியாது என்று அவரிடமே சரண் அடைந்தனர்.

அபிஷேகப் பிரியன் தன் அலங்கார ரூபத்தை ஒரு நிலைக் கண்ணாடியில் பார்த்தார். அதில் தெரிந்த உருவத்தைப் பார்த்து அவர், "சுந்தரா, வருக" என்றார்.

அதில் இருந்து வந்த சுந்தரர் சிவனை வணங்கி, "அடியேனுக்குக் கட்டளையாது?" என்றார்.

"நீ போய் அந்த ஆலகால விஷத்தை எடுத்து வா" என்றார். சுந்தரர் கொண்டு வந்த விஷத்தை தேவர்களையும் அசுரர்களையும் காக்கும் பொருட்டு சிவனே உண்டார்.

பதிக்கு ஒன்று என்றால் சதி சும்மா இருப்பாளா? ஓடி வந்து தன் பதியின் கண்டத்தில் இறங்க இருந்த விஷத்தைத் தன் திருக்கரங்களால் பிடித்தாள்.

தாயின் திருக்கரங்கள் பட்டால் விஷமும் அமிர்தமன்றோ? அதனால் அந்த விஷம் சிவனின் கண்டத்திலேயே உருண்டையாக நீல நிறத்தில் தங்கிவிட்டது. அதனாலேயே அவர் 'திருநீலகண்டர்' ஆனார்.

பாற்கடலைக் கடைந்ததோ தசமி திதியல். சிவன் விஷம் அருந்தியது ஏகாதசியில். அமிர்தம் கிடைத்ததோ துவாதசியில். அமிர்தம் கிடைத்த மகிழ்ச்சியில் தேவர்கள் ஆடிப்பாடி கொண்டாடினர். சிவனுக்கு நன்றி தெரிவிக்க மறந்தனர். அமிர்தம் கிடைக்க மூல காரணமாக இருந்த அவரை மறந்து விட்டோமே என்று வருந்தி அமிர்தத்தை எடுத்துக் கொண்டு அவரிடம் சென்று தம் தவறுக்கு மன்னிப்பு கோரினர்.

சிவன் அவர்களை மன்னித்து அமிர்தத்தை உண்டு நந்தியின் இரு கொம்புகளுக்கு இடையில் ஆனந்தத் திருநடனம் புரிந்தார். கலைமகள் வீணை வாசிக்க, திருமகள் பாட, இந்திரன் புல்லாங்குழல் ஊத, பிரமன் தாளமிட, திருமால் மிருதங்கம் வாசிக்க, சிவபெருமான் தாண்டவம் ஆடினார்.

இது நடந்ததோ ஒரு கார்த்திகை மாதம் சனிக்கிழமை த்ரயோதசி திதியில் மாலை 4 மணி முதல் ஆறு மணி வரை. இந்த நேரத்தையே நாம் பிரதோஷம் என்று அழைக்கிறோம். சூரியன் மறைவதற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றே முக்கால் நாழிகையும் உள்ள நேரத்தையே 'பிரரோஷ காலம்' என்று அழைப்பர்.

அது என்ன? நந்தியின் கொம்புகளுக்கு இடையில் என் ஆடினார்? அவருக்கு என்ன சிறப்பு? அதை அறிய நாம் நந்தியம் பெருமானின் வரலாற்றுக்குச் செல்ல வேண்டும்...

சிலாதர் எனறு ஒரு முனிவர் இருந்தார். இவர் கடும் தவம் செய்து பிள்ளை வரம் பெற்றார். சிலாதரின் மகன் ஆதலால் சைலாதி என்று பெயர் வைத்தார்.

சைலாதி இளமையிலேயே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். எல்லா வேதங்களும் கற்றுத் தேர்ந்தார்.

ஒரு சமயம் இவரது இல்லத்திற்கு இரு முனிவர்கள் வந்தார்கள். சிலாதர் அவர்களை தானும் வணங்கி தன் மகனையும் வணங்கச் செய்தார்.



அவர்கள் சைலாதிக்குப் "பெரும் புகழ் பெறுவாய்" என்று ஆசிர்வாதம் செய்தனர். இதனைக் கேட்ட சிலாதர் அவர்களிடம், "நீங்கள் ஏன் என் மகனுக்கு தீர்க ஆயுளுடன் திகழ்வாய்" என்று வாழ்த்தவில்லை? என்று கேட்டார். அதற்கு அவர்கள் அவன் 16 வயது வரைதான் வாழ்வான் என்று கூறினார்கள்.

இதை அறிந்த சிலாதர் மிகவும் வருத்தமுற்றார். தன் தந்தையின் வருத்தத்தை அறிந்த சைலாதி தன் தந்தையிடம், "தந்தையே! கவலைப்படாதீர்கள். நான் சிவனை நோக்கி தவம் செய்து வரம் வாங்கி வருகிறேன்" என்று கூறினார்.

சிலாதிதரும் வாழ்த்தி வழியனுப்பினார். சைலாதி பல ஆண்டுகள் சிவனை நோக்கி தவம் இருந்தார். சிவன் அவர் தவத்திற்கு மெச்சி, "என்ன வரம் வேண்டு கேள்?" என்றார். சைலாதி அவரிடம், "நான் ஒரு கோடி முறை ருத்ர ஜபம் செய்ய ஆயுள் வேண்டும்" என்று கேட்டார்.

சிவனும் "தந்தோம்" என்று கூறி மறைந்தருளினார். ஒரு கோடி ருத்ர ஜபம் முடிந்தது திரும்பவும் சிவன் காட்சி கொடுத்தார். சைலாதியும், "இன்னும் ஒரு கோடி முறை ருத்ர ஜபம் செய்ய ஆயுள் வேண்டும் என்று கேட்டார்.

இதுபோல் ஏழு முறை நடந்தது. ஏழாவது முறையும் சைலாதி சிவனிடம் அதையே கேட்டார்.

அதற்கு சிவன், "போதும். இனி நீ தவம் செய்ய வேண்டாம். இனி நீ என் புதல்வன் ஆவாய். நீ நந்தி என்றே அழைக்கப்படுவாய். உனக்குப் பிறப்பு, இறப்பு இரண்டுமே கிடையாது. இன்னு முதல் நீ என் கணங்களுக்கு அதிபதியாவாய். இனிமேல் என் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் நீயே கவனித்து வர அருள் செய்கிறேன். என்னை விட்டுப் பிரியாமல், நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் என் வாகனமாக நீ வருவாய்" என்று நந்திக்கு அருளினார்.

அதனால்தான் "நந்தியிடம் முறையிட்டாலே போதும், சிவபெருமானின் அனு க்ரஹம்

கிட்டும்" என்று நம்பப்படுகிறது. நந்தி என்ற சொல்லுக்கு 'எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவர்' என்று பொருள். இளமையும் திட்பமும் வாய்ந்தவராக நந்தி தேவர் கருதப்படுகிறார்.

இத்தகைய பெருமை மிக்க நந்தி தேவரையும் அவரது கொம்புகளுக்கு இடையில் ஆடிய சிவபெருமானையும் பிரதோஷ காலத்தில் வழிபட்டு நலம் பெறுவோம்.

சிவபெருமானுக்கு உரிய பலவித விரதங்களில் பிரதோஷ விரதம் மிகவும் முக்கியமானது.

தோஷம் என்றால் குற்றம். பிரதோஷம் குற்றமற்றது என்று பொருள். குற்ற மற்ற அந்த வேளையில் சிவனையும் நந்தியையும் வழிபடுவது சிறந்த பலனைத் தரும். நம் தோஷங்கள் அனைத்தும் விலகும்.

இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் சகல துன்பங்களில் இருந்தும் நீங்கி இன்பத்தைஎய்துவர். பிரதோஷ நேரத்தில் சிவனை தியானிப்பவர் கேட்ட கேரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும்.

பிரதோஷம் ஐந்து வகைப்படும். அவை –

1. நித்தியம் பிரதோஷம் - தினமும் மாலை 4 முதல் 6 மணி வரை

2. பட்சப் பிரதோஷம் - இது வளர் பிறை திரயோதசி அன்று வருவது.

3. மாதப் பிரதோஷம் - இது தேய் பிறை திரயோதசி அன்று வருவது.

4. மகா பிரதோஷம் - சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் சனிக்கிழமை கூடிய திரயோதசி நாளன்று வருவது. (கார்த்திகை மாதம் சனிப் பிரதோஷத்தன்று தான் சிவபெருமான் நந்தியின் கொம்புகளுக்கு இடையே திருநடனம் புரிந்தார்.

5. பிரனயப் பிரதோஷம் - இது பிர ளய காலத்தில் வருவது. அப்போது எல்லாமே ஈசனுள் அடங்கும்.

13 பிரதோஷங்கள் தொடர்ந்து முறைப்படி பிரதோஷ வழிபாடு செய்பவர்களுக்கு



வாழ்வில் சகல நலமும், வளமும் கிடைக்கும்.

108 பிரதோஷ பூஜை செய்பவர்களுக்கு சகல பாவங்களும் நீங்கி சிவனின் திருவடியில் வசிக்கும் பலன் கிட்டும்.

**இவ்வளவு பெருமை மிகுந்த பிரதோஷ விரதத்தை எப்படி கடை பிடிப்பது என்று பார்ப்போம்...**

பிரதோஷ விரதம் இருப்பவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வரும் சனிப் பிரதோஷத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

காலையில் எழுந்து உடலை சுத்தி செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து அன்று முழுவதும் உபவாசம் இருந்து மாலையில் சிவன் கோயில் சென்று சிவ தரிசனம் செய்து நந்திக்கு அருகம்புல் மாலை சார்த்தி, காப்பரிசி படைத்து வணங்கி வழிபட வேண்டும்.

பிரதட்சண முறை

முதலில் சிவலிங்கத்தையும் நந்தி தேவரையும் வணங்கிக் கொண்டு, அப்பிரதட்சணமாகச் சண்டிகேஸ்வரர் சன்னதி வரை சென்று அவரை வணங்கிக் கொண்டு அப்படியே திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்கிக் கொண்டு வழக்கம் போல பிரதட்சணமாக ஆலயத்தை வலம் வரும் போது சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் அப்படியே வந்த வழியே திரும்பி அப்பிரதட்சணமாக சன்னதிக்கு வந்து சிவலிங்கத்தையும் நந்தியையும் வணங்க வேண்டும்.

இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அனேக அஸ்வ மேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என பல நூல்கள் கூறுகின்றன. இதை 'பிரதோஷ பிரதட்சணம்' என்பார்கள் பாற்கடலைக் கடையும்போது இப்படித்தான் மாற்றி மாற்றிக் கடைந்தார்கள் என்பதால் அதேபோல பிரதட்சணம் செய்வதும் சிறப்பாகும். இவ்வாறு ஆலயத்தில் பிரதோஷ வழிபாட்டை முடித்து பின் வீட்டிற்குச் சென்று உணவருந்த வேண்டும்.

பிரதோஷத்தன்று இறைவனுக்கும் நந்திதேவருக்கும் தேவையான அபிஷேகப் பொருட்களை வழங்கினால் வாழ்வில் பல நற்பலன்களை அடையாளம்.

பால் - நோய் தீரும், நீண்ட ஆயுள் கிடைக்கும்

தயிர் - பல வளமும் உண்டாகும்

தேன் - இனிய சாரீரம் கிடைக்கும்

பழங்கள் - விளைச்சல் பெருகும்

பஞ்சாமிர்தம் - செல்வம் பெருகும்

நெய் - முக்தி பேறு கிட்டும்

இளநீர் - நல்ல மக்கட்பேறு கிட்டும்

சர்க்கரை = எதிர்ப்புகள் மறையும்

எண்ணெய் - சுக வாழ்வு கிட்டும்

சந்தனம் - சிறப்பான சக்திகள் பெறலாம்

மலர்கள் - தெய்வ தரிசனம் கிட்டும் கரும்புச் சாறு - உடல் ஆரோக்கியம் எலுமிசை - மரண பயம் போக்கும்

பிரதோஷ பூஜை செய்பவர்களுக்கு அறிவு வளரும், நினைவாற்றல் பெருகும்.

பசும்பால் கொண்டு ஈசனை அபிஷேகம் செய்து வில்வ இலை. சங்குப் பூவால் வழிபட்டால் பூர்வ ஜென்ம வினைகள், பிராமணனைக் கொன்ற சாபம், பெண்ணால் வந்த சாபம் உள்ளிட்டவை நீங்கும்.

பிரதோஷ வழிபாடு செய்தால் தரித்திரம் ஒழியும். நோய் தீரும், கெட்ட நோய்கள் நம்மை அண்டாது.

சிவனை வழிபட ஏற்ற காலம் சாய ரக்ஷை. அதிலும் சிறந்தது சோம வாரம். அதனினும் சிறந்தது சோம சிவராத்திரி. அதனினும் சிறந்தது பிரதோஷம். சோம வார பிரதோஷத்தில் சிவனை வழிபடுபவர்கள் எல்லா தேவர்களையும் தரிசித்த புண்ணியத்தைப் பெறுவார்கள்.

இப்படிப்பட்ட பெருமை மிக்க பிரதோஷ விரதத்தை நாமும் வாழ்வில் அனுஷ்டித்து, நந்தி தேவரையும் சிவபெருமானையும் வணங்கி வலம் வந்து வாழ்வில் சகல பேறுகளும் பெற்று உய்வோமாக!

நன்றி ஆலயம்

**சைவநீதி இதழுக்கு சைவ சமயம் குறித்த அரிய தகவல்களையும் கட்டுரைகளையும் வாசகர்கள் எழுதி அனுப்பலாம். சிறப்பான படைப்புகள் சைவநீதி இதழில் இடம்பெறும். வாசகர்கள் ஆன்மிக இதழுக்கு எழுதுவதன் மூலம் ஆன்மிக பணியாற்ற தொடங்கலாம்.**

# February - 2013 தை – மாசி

| Mon | Tue | Wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1<br>Muhurtham<br>**Thai** 19 | 2<br>20 | 3<br>Ashtami 21 |
| 4<br>Navami 22 | 5<br>Dasami 23 | 6<br>Ekadhasi 24 | 7<br>25 | 8<br>Sivarathri<br>Pradhosam 26 | ● 9<br>New Moon 27 | 10<br>28 |
| 11<br>29 | 12<br>30 | 13<br>Muhurtham<br>Sankadakara Chaturthi<br>**Maasi** 1 | 14<br>Muhurtham 2 | 15<br>3 | 16<br>Shasti 4 | ★ 17<br>Kirutikai 5 |
| 18<br>Ashtami 6 | 19<br>Navami 7 | 20<br>Muhurtham<br>Dasami 8 | 21<br>Ekadhasi 9 | 22<br>Muhurtham 10 | 23<br>Pradhosam 11 | 24<br>12 |
| ○ 25<br>Full Moon 13 | 26<br>14 | 27<br>15 | 28<br>16 | | | |

| Rahukalam | | | | Gulikankalam | | | | Yamagandam | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Days | From | To | | Days | From | To | | Days | From | To | |
| Sun | 4.30 | 6.00 | PM | Sun | 3.00 | 4.30 | PM | Sun | 12.00 | 1.30 | PM |
| Mon | 7.30 | 9.00 | AM | Mon | 1.30 | 3.00 | PM | Mon | 10.30 | 12.00 | AM |
| Tue | 3.00 | 4.30 | PM | Tue | 12.00 | 1.30 | PM | Tue | 9.00 | 10.30 | AM |
| Wed | 12.00 | 1.30 | PM | Wed | 10.30 | 12.00 | AM | Wed | 7.30 | 9.00 | AM |
| Thu | 1.30 | 3.00 | PM | Thu | 9.00 | 10.30 | AM | Thu | 6.00 | 7.30 | AM |
| Fri | 10.30 | 12.00 | AM | Fri | 7.30 | 9.00 | AM | Fri | 3.00 | 4.30 | PM |
| Sat | 9.00 | 10.30 | AM | Sat | 6.00 | 7.30 | AM | Sat | 1.30 | 3.00 | PM |



AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS
020 8540 1500, 020 8903 3300
RUNNING
SUCCESSFULLY
STARRING
KAMAL HAASAN
POOJA KUMAR
ANDREA, NASSER
RAHUL BOSE
விஸ்வரூபம்
Vishwaroopam
12A
MUSIC: SHANKAR EHSAAN LOY
WRITTEN & DIRECTION : KAMAL HAASAN
WITH ENGLISH SUBTITLES
WWW.CINEWORLD.CO.UK OR CALL - 0871 220 1000
AYNGARAN INTERNATIONAL
presents
B STUDIOS
பரதேசி
- பாலா
COMING SOON
Paradesi
G V பிரகாஷ் குமார் | வைரமுத்து | செழியன் | கிஷோர் T E
COMING SOON
AYNGARAN INTERNATIONAL
presents
RELIANCE
Entertainment
டேவிட்
IN CINEMAS
1st FEB 13
DAVID
AYNGARAN INTERNATIONAL
presents
IN CINEMAS
FEB 2013
AADHIBHAGAVAN

1/2013

1/2013



விளம்பர உதவி



Lycamobile
Call the world for less